## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

### 01.08.2018 புனித அல்போன்ஸ் லிகோரி திருப்பலி

இன்று இயேசுவில் பிரியமானவர்களே, இன்று புனித அல்போன்ஸ் லிகோரி என்னும் புனிதரின் நினைவு நாளைச் சிறப்பிக்கின்றோம். இவருக்கு புனித அல்போன்ஸ் மரிய லிகோரி என்னும் பெயருமுண்டு. இவர் அன்னை மரியாளின்மேல் மிகுந்த பக்தி கொண்டவராதலால் அப்பெயரில் அழைக்கப்படுகிறார். இத்தாலியில் நேப்பிள்ஸ் நகரில் "சான்ட் அகாட்டா டேட் கோட்டி" என்னும் இடத்தில் ராணுவ கேப்டனாக இருந்த சான் ஜோசப் என்பவரின் எட்டு பிள்ளைகளுள் ஒருவர். இவரது தாய் ஒரு ஸ்பானிஷ் பெண்மணி. இவர் 27.9.1726 அன்று குருப்பட்டம் பெற்றார். இவர் சிலுவைப்பாதை நிகழ்வுகளில் தீவிரமான பக்தர். பாடலாசிரியர், ஓவியர், இறைவல்லுநர் என பல விதங்களில் இடைவிடாமல் மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட்டவர். 9.11.1732ல் பல இன்னல்களுக்கிடையில் தனது விடா முயற்சியினால் "இரட்சகர் சபை"யை உருவாக்கினார். புனிதரின் செயல் திறமைக் கண்டு, கி.பி. 1762ல் "சான்ட் அகாட்டா டேட் கோட்டி"யின் ஆயராக நியமிக்கப்பட்டார். அன்னை மரியாளின் மாட்சிமைப் பற்றி பல நூல்களை எழுதியுள்ளார். "டாக்டர் ஆப் த சர்ச் என்ற பட்டமும் (நல்லொழுக்காதி) நன்னெறிவாதிகளின் பாதுகாவலர்" என்ற பட்டமும் பெற்றுள்ளார். தன்னுடைய 91வது வயதில் 01.08.1787 அன்று இறந்து விண்ணகம் சென்றார். இவரின் சேவைகளைப் பாராட்டி 15.9.1816ல் திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் முத்திப்பேறு நிலையையும், 26.5.1839ல் பதினாறாம் கிரகோரி என்னும் திருத்தந்தை இவருக்கு புனிதர் நிலையையும் வழங்கினார்கள். இவரது இடைவிடா சேவையின் பரிமாணத்தை நாமும் உணர்ந்து இறைவனின் சேவையைத் தொடர்வோம் என்ற சிந்தனையுடன் இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, திருஅவையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தம் நிலை உணர்ந்து வளரும் சமுதாயத்திற்கு வழிகாட்டிகளாக வாழவும், தன் சொல், செயல் அனைத்திலும் சிறந்தோங்கி பிறருக்கு முன்மாதிரியாக வாழ்ந்த புனித அல்போன்ஸ் லிகோரி போன்று சேவை மனப்பான்மைக் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, புனித அல்போன்ஸ் லிகோரி பல திறமைகளில் சிறந்து விளங்கியது போல எங்கள் பிள்ளைகளும் உம்மை புகழ்வதிலும், போற்றுவதிலுமே தங்கள் திறமைகளை பயன்படுத்திட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. சமத்துவத்தின் தந்தையே இறைவா, உலகெங்கும் வாழும் மக்களின் மத்தியில் ஏழை, பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வுகள், நோய், உணவு பற்றாக்குறை, தரக்குறைவான கல்வி இதுபோன்ற பல துன்பங்களால் நலிந்துக்கொண்டிருக்கும் ஏழை எளியவரின் துயர் துடைக்க நாங்களும் புனித அல்போன்ஸ் லிகோரி போன்று சேவை மனப்பான்மைக் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.





### 02.08.2018 அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி திருப்பலி

அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி 1858ம் ஆண்டு ஆகஸ்டு 2ம் நாள் பிரான்ஸ் நாட்டில் பாரீஸ் நகரில் ஓர் அரச குடும்பத்தில், லடிஸ்லாஸ், மரிய அம்பாரோ என்னும் தம்பதியருக்கு முதல் பிள்ளையாகப் பிறந்தார். இவர் தனது 6ம் வயதில் தாயை இழந்தார். அரச குடும்பத்தில் பிறந்தவராயினும் இறைவனுடைய அழைத்தலை ஏற்றுக்கொண்டு அவர் மட்டும் போதும் என்று, அனைத்து வசதிகளையும், ஆடம்பர வாழ்க்கையையும் துறந்த, இவரது வாழ்வே இவரின் புனிதத்திற்குச் சான்றாகும். சலேசிய சபையில் சேருவதற்கு முன்னரே இவரது நுரையீரல் பாதிக்கப்பட்டு பெரிதும் துன்பப்பட்டார். ஆனால் இறைவன்மீது கொண்டிருந்த ஆழ்ந்த அன்பின் காரணமாக அனைத்தையும் தாங்கிக்கொண்டார். இவர் தம் இளம் வயதிலேயே ஆழ்ந்த விசுவாசமும், பக்தியும் கொண்டு விளங்கினார். பாடுபட்ட சிலுவைக்கு முன்பு தியானத்தில் ஈடுபட்டு வந்தார். வேலையாட்களிடம் கனிவன்புடன் நடந்துக்கொண்டு அனைவரது நன்மதிப்பையும் பெற்றார்.

தனது 20ம் வயதில் உலகப் பற்றுகளை வெறுத்து துறவியாக வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தபோது தூய தொன்போஸ்கோவின் சந்திப்பு இவரைக் கவர்ந்ததால் அவருடன் தங்கினார். தனது 29ம் வயதில் திருத்தந்தை 13ம் சிங்கராயரின் பரிந்துரையின் மூலம் சலேசிய சபையில் சேர்ந்தார். அவரைப்பற்றி அவரது துறவற பயிற்சியாளர் தொன் பர்பேரிஸ் கூறும்போது "புனிதராவதற்கான எல்லாத் தகுதியும் இவரிடம் காணப்பட்டன," என்றாராம். இறைவனோடு என்றும் ஒன்றித்திருக்க மனவல்லிய செபங்களை அடிக்கடி சொல்வாராம். இவரை எப்படியாவது வீட்டிற்குக் கொண்டுவந்துவிட வேண்டும் என்று இவரது குடும்பத்தினர் தொல்லைகள் பல கொடுத்துவந்த போதும் அனைத்தையும் பொறுமையுடன் தாங்கிக்கொண்டாராம். இவர் சலேசிய சபையில் சேருவதற்குக் கட்டாயப் படுத்தப்பட்டார் என்று அவரது குடும்பம் எழுப்பிய குற்றச்சாட்டை மறுத்து "நான் என்ன செய்கின்றேன் என்று எனக்குத் தெரியும், யாரும் என்னை கட்டாயப்படுத்தவில்லை. தொன் போஸ்கோ உயிருடன் இருந்தபோது அவரை நான் அன்பு செய்தேன். அவரது சபையை நான் உயர்வாக எண்ணுகின்றேன்", என்று கூறினாராம்.

"நீ விரைவில் குருவாக திருநிலைப்படுத்தப்படுவாய், உலகிற்கு

நல்லதைச் செய்வாய்", என்ற தூய தொன் போஸ்கோவின் வாக்கு 1892ம் ஆண்டு ஏப்ரல் 2ம் நாளன்று நிறைவேறியது. ஆனால் தனது குருத்துவ வாழ்வின் ஓராண்டிலேயே, அலாசியா என்ற இடத்தில், 1893ம் ஆண்டு ஏப்ரல் 8ம் நாள் புனித சனியன்று மாரடைப்பால் மண்ணுலகைவிட்டு விண்ணுலகில் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடச் சென்றார். அகஸ்துஸ் தனது வேதனையிலும் சாந்தமுடன் இருந்து, இவ்வுலகப் பற்றற்றவராகக் காணப்பட்டார். இறைவனோடு ஒன்றித்து, இறைச்சித்தத்திற்குப் பணிந்து, இயேசுவின் பாடுகளோடு, தன்னுடைய நோயினால் ஏற்பட்ட துன்பங்களை இணைத்து, பொறுமையிலும், அமைதியான மனநிலையிலும், இறையன்பிலும் ஆழமாக வளர்ந்து புனிதத்தின் உயர்ந்த நிலையை அடைந்தார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை 2004ம் ஆண்டு ஏப்ரல் 25ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவரின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு நாமும் இறைவன்மீது ஆழ்ந்த விசுவாசமும் பக்தியும் கொண்டவர்களாக வாழ இத்திருப்பலியில் பங்குகொள்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே, திருஅவையை வழிநடத்தும் அனைத்து தலைவர்களும் மறுகிறிஸ்துவாக மாறி அவரின் விழுமியங்களைக் கடைப்பிடித்து புனிதர்களைப்போல உலகிற்குச் சான்று பகர்ந்து வாழவும், உம் படைப்பாகிய நாங்கள் உம்மையும், எம் சகோதர சகோதரிகளையும் அன்பு செய்து வாழவும், உம்முடைய நோக்கத்தை நிறைவேற்றவும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. எம் சலேசிய குடும்பங்களின் அங்கத்தினர்கள் அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கியின் பாதையில் நடந்து, அன்பு செய்து, ஏழை எளிய, கைவிடப்பட்ட இளம் உள்ளங்களின் வளர்ச்சிக்காக தங்களையே கையளிக்கவும், உமக்கேற்ற பாதையில் அவர்களை வழிநடத்தத் தேவையான அனைத்து ஆற்றலையும் அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் பிதாவே, இளையோர் அனைவரும் உமது நற்செய்தியைக் கடைப்பிடித்து, பிறருக்குச் சாட்சிகளாக வாழவும், தோல்விகள் வந்தாலும் துவண்டுவிடாமல் மீண்டும் எழுந்து தங்களின் இலட்சியத்தை நோக்கிப் பயணம் செய்ய உம் தூய ஆவியின் வல்லமையால் அவர்களை வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. நன்மையின் நாயகரே எம் இறைவா, இங்கு கூடியுள்ள நாங்கள் அனைவரும் தூய ஆவியின் ஏவுதலுக்கேற்ப வாழ்ந்து, கிறிஸ்துவின் விழுமியங்களை எங்களது வாழ்வில் கடைப்பிடித்து, சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் நிலை நாட்டவும், ஒருவரையொருவர் அன்பு





செய்து உமக்கேற்ற மக்களாக வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 04.08.2018 புனித ஜான் மரிய வியான்னி திருப்பலி

அன்பான இறைசமூகமே, இன்று நமது தாய்த் திருஅவையானது குருக்கள் மற்றும் பங்கு தந்தையர்களின் பாதுகாவலரான புனித ஜான் மரிய வியான்னியின் திருவிழாவைக் கொண்டாட அழைப்பு விடுக்கிறது. பிரான்ஸ் நாட்டில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த இவர் சிறுவயது முதலே பக்தியிலும் மற்றவர்களுக்கு உதவுவதிலும் சிறந்து விளங்கினார். குருவாக வேண்டும் என்ற எண்ணத்தை தனது மனதில் விதைத்து அதற்காக உழைத்தார். புரட்சியிலும் போரிலும் சீரழிந்து ஒழுக்கமற்ற வாழ்வில் திளைத்திருந்த மக்களின் மனமாற்றத்திற்காகத் தொடர்ந்து செபித்தார். பாவ மன்னிப்புப் பெற்று மனம்மாறும்படி தொடர்ந்து வலியுறுத்தினார். இவரது வாழ்க்கை முறையையும் செப தப வாழ்வையும் கண்ட மக்கள் மனம் திரும்பி கிறிஸ்தவ பக்தியில் வேரூன்றினர். இந்நன்னாளில் சிறப்பான விதத்தில் எல்லா குருக்களுக்காகவும், பங்கு தந்தையர்களுக்காகவும் செபிப்போம். நாமும் இறைவனுக்கு உகந்த மக்களாக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வழிநடத்தும் இறைவா, எங்கள் திருஅவையை நன்முறையில் வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் ஆசீர்வதியும். இவர்கள் செய்கின்ற பணி உம்மை மட்டுமே மகிமைப்படுத்த வேண்டுமென்று புனித ஜான் மரிய வியான்னி பரிந்துரையின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் அரசரே எம் இறைவா, இன்றைய நாளில் நாங்கள் நினைவுகூறும் புனித ஜான் மரிய வியான்னிபோல், இன்றுள்ள குருக்களும் மக்களுக்காகவும், திருஅவைக்காகவும் உழைத்திடவும் அதன் மூலம் திருஅவை வளரவும் உமதருளைப் பொழிந்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணையின் அருட்கடலே எம் இறைவா, மழையின்றி தவிக்கும் எங்களுக்கு நல்ல மழையினைத் தந்து ஆசீர்வதிக்க வேண்டுகிறோம். நிலங்கள் நீரின்றி வறண்டும், குளங்கள், ஏரிகள் அனைத்தும் பாலை நிலம்போல் காட்சியளிக்கின்றன. தெய்வமே, நீர் கருணைக்கூர்ந்து நல்ல மழையைக் கொடுத்து நிலமும் நாடும் செழிக்க வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 05.08.2018 ஆண்டின் பொதுக்காலம் 18ம் ஞாயிறு திருப்பலி

I. விப. 16: 2-4,12-15 II. எபே. 4:17, 20-24 யோவா. 6: 24-35

இயேசு கிறிஸ்துவில் ஒன்றிணைக்கப்பட்ட மக்களே, இன்றைய வாசகங்கள் நம் வாழ்வில் எதற்கு முதலில் முக்கியத்துவம் கொடுக்கிறோம் என சிந்திக்க அழைக்கின்றன. வெறும் உடல்பசியைப் போக்கும் இவ்வுலகில், ஆன்ம உணவுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நம்மை படைத்த, என்றும் அழியா உணவான இறைவனை முதலில் நினைக்க வேண்டும். விடுதலைப் பயணத்தில், பாலைநிலத்தில் வாடிய மக்களுக்கு ஒவ்வொரு நாளும் வேண்டியளவுக்கு உணவளித்தும், அம்மக்கள் நன்றி மறந்து, தங்களைப் பாதுகாத்து வழிநடத்தி வந்த இறைவனுக்கு எதிராக முணுமுணுக்கின்றனர். இரண்டாம் வாசகத்தில் புனித பவுலடிகளார் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டுள்ள நாம், பழைய நடத்தைகளைக் களைந்து, புதிய மனிதர்களாக வாழவேண்டும் என்றும், நமது வாழ்க்கை உண்மையுள்ளதாகவும், நீதி நிறைந்ததாகவும், தூய்மையை வெளிப்படுத்துவதாகவும் அமைய வேண்டும் என்கிறார். ஆண்டவர் இயேசுவும் தன்னை நாடிவருபவர்கள் உணவுக்காக மட்டும் வராமல் தந்தையாம் இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுபவர்களாகவும் இருக்க வேண்டும் என்கிறார். நாம் அழிந்து போகும் உணவிற்காக ஆண்டவரை நாடாமல் நமது வாழ்வில் புதுப்படைப்பாக மாற அருள் வேண்டி ஆண்டவர் இயேசுவிடம் செல்வோம். மேலும் இத்திருப்பலி வழியாக இறைவன் தனதருளைப்பொழிந்து நம்மை உண்மைக்குச் சான்று பகர்பவர்களாக மாற்ற வேண்டுமென்று இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் உருவே இறைவா, எமது திருத்தந்தையின் ஆன்ம சரீர நலனையும் அவரது மேய்ப்புப் பணிக்குத் துணையாய் இருக்கும் உடனுழைப்பாளர்களான ஆயர்கள், குருக்கள், துறவியர் நலனையும் பாதுகாத்து சமூக விரோதிகளின் தாக்கத்திலிருந்து விலக்கி, புனிதத்துவம் குலையாமல் இறைவார்த்தையை அறிவிக்கப் போதுமான வல்லமையைத் தந்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழ்வு தரும் உணவு நானே என்றுரைத்தவரே, எம் நாட்டுத்தலைவர்கள் தாராள உள்ளத்தோடு மக்களுக்கு உதவி செய்திடவும், பசியோடு இருக்கும் மக்கள் தங்களின் தேவைகளை எம் தலைவர்கள் வழியாகப் பெற்றிடவும் உமதருளைப்பொழியுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. பாசத்தின் புகலிடமே இறைவா, எமது பங்கு தந்தையையும் அவர் உடல் நலனையும் பாதுகாக்கவும், அவர் பங்கு மக்களின் ஆன்மீக வளர்ச்சியில் இன்னும் ஆர்வமுடன் செயல்படவும், விசுவாச வாழ்வில்





நிலைத்து கிறிஸ்துவின் அன்பினைப் பறைச்சாற்றிடவும் உமதருளைப் பொழிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. கருணையின் இருப்பிடமே இறைவா, தீராத வலிகளாலும், நோயினாலும் துன்புறும் மக்களுக்கு, விடுதலையளித்து வறுமை, பற்றாக்குறை, கடன் சுமையை நீக்கி பிள்ளைகளுக்கு நல்ல கல்வியும், ஒழுக்கமும், ஞானமும் அளித்து வாழ்வில் புனிதப் பாதையில் பயணிக்கத் தேவையான அனைத்து ஆற்றல்களையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 06.08.2018 ஆண்டவரின் தோற்றம் மாற்றம் விழா திருப்பலி

I. தானி. 7: 9-10,13-14 II. 2பேதுரு 1:16,-19 மாற்கு 9: 2-9

இயேசு கிறிஸ்துவில் பிரியமுள்ள மக்களே, நம் தாய் திருஅவையானது, இன்று நம் ஆண்டரின் தோற்றம் மாற்றம் விழாவினை நினைவுக் கூற நம்மை அழைக்கின்றது. இன்றைய வாசகங்கள் அனைத்தும் ஆண்டவரின் உருமாற்றத்தைப் பற்றியும் அவரின் மாட்சியைப் பற்றியும் கூறுகின்றன. முதல் வாசகத்தில் தானியேல் கண்ட காட்சியில், மானிடமகன் வானத்தில் மேகத்தின்மீது வருவதாகவும், அவர் மாட்சி பெற்று, அவரிடம், உலகத்தின் ஆட்சியுரிமைகள் அளிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. நற்செய்தியில் தானியேல் கண்ட காட்சியைப்போலவே மானிடமகன் இயேசு தாபோர் மலையில் உருமாறும்போது வானின்று "என் அன்பார்ந்த மகன் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்ற தந்தையின் வாக்குறுதி மூலமும் இயேசு உயிர்த்து மாட்சி அடையப்போகின்றார் என்பதை வெந்நிற ஆடை வழியாகவும் வெளிப்படுத்துகிறார். நாம் அனைவரும் இந்த மாட்சிக்காகவே வாழவேண்டும் என்றும், நாமும் இயேசுவோடு மாட்சி பெறுவோம் என்றும் புனித பேதுரு கூறுகிறார். எனவே இத்திருப்பலியில் இயேசுவின் மாட்சியில் இடம் பெறும் தகுதிக்காக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நீதியின் இறைவா, எம்மை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் ஆண்டவரின் மாட்சிமை பொருந்திய வருகையை எதிர்நோக்கும் காலச்சூழலில் ஆண்டவரின் நீதி, வல்லமை அனைவர்மீதும் இறங்கி பேரின்ப வீட்டினுள் நுழையும் பெரும் பாக்கியம் பெற வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. அளவில்லா மாட்சிமையின் அரசரே, மாசற்ற வெண்ணிற ஆடையை நீர் அணிந்து வரும் அந்த நாளில் எங்கள் உள்ளங்களில் பொதிந்துக் கிடக்கும் அழுக்குகள் நீங்கி தூய்மையான உள்ளத்தோடு எம்மை உமக்கு அர்ப்பணிக்க காத்திருக்கும் நன்மக்களாக எம்மை உருவாக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய்மையின் இறைவா, உம்மை ஏற்றுக்கொள்ளாது இவ்வுலக சூழலில் தவறான வாழ்க்கை வாழ்ந்து மரித்து உம் பேரின்ப வீட்டை அடையமுடியாமல் வருந்தும் அனைத்து ஆன்மாக்களையும் உமது தூய திருமுக ஒளியால் ஏற்று அவர்களுக்கு பேரின்ப வாழ்வை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. வாழ்வின் ஒளிச்சுடரே எம் இறைவா, எங்களின் அன்றாட வாழ்வில் ஏற்படும் அனைத்து பிரச்சனைகளிலிருந்து நாங்கள் உம் கருணையின் ஒளியால் விடுப்பட்டு உம்மைப் போற்றவும், துதிக்கவும் உமது பாதையில் எங்களை வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 12.08.2018 ஆண்டின் பொதுக்காலம் 19ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

I. 1அர. 19: 4-8 II. எபே. 4:30-5:2 யோவா. 6: 41-51

இறையேசுவில் இனிய மக்களே, இறைவனின் அன்பை ஏற்று அவரின் பராமரிப்பை விசுவசித்தால் நிலைவாழ்வு பெறுவோம் என்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன. எலியா தன்னை இறைவன் கை நெகிழ்ந்து விட்டார், எதிரிகளின் கைகளில் சாவதைவிட இறைவனே தன்னை எடுத்துக்கொள்வது நலம் என புலம்புகிறார். ஆனால் இறைவன் தனது பராமரிப்பையும் அன்பையும் அவருக்கு வெளிப்படுத்தி தன் பணிக்கு இட்டுச் செல்கிறார். ஆண்டவராகிய இயேசுவும், "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே, என்னில் நம்பிக்கைக் கொள்வோர், நிலைவாழ்வு பெறுவீர்கள்" என்று வாக்குறுதி அளிக்கின்றார். இத்தகு இறை நம்பிக்கையில் வாழ்வதோடு மனக்கசப்பு, சீற்றம், சினம், பழிச்சொல் போன்ற எல்லா தீயக் குணங்களையும் நீக்குவோம். இயேசுவே தந்தையிடமிருந்து வந்தவர் என்பதை நம்பி நன்மை செய்வதிலும், பரிவு காட்டுவதிலும், மன்னிப்பதிலும், இயேசுவைப்போலவே வாழ்வோம். தந்தையாம் இறைவன் இப்புனித வாழ்வு வாழ நமக்கு அழைப்பு விடுக்கிறார். இத்திருப்பலியில் நம் ஒவ்வொருவரையும் கிறிஸ்துவுக்கு மணம்வீசும் நறுமணமாக ஒப்புக்கொடுப்போம். இறைவனின் அன்பு பிள்ளைகள் என்ற சிந்தனையோடு மனமுருகி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. விண்ணகத் தந்தையே இறைவா, உமது திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள் அனைவரும் அன்பிலும், அமைதியிலும், ஒற்றுமையிலும் தங்களின் அழைப்பின் மேன்மையை உணர்ந்து மகிழ்வுடனும் ஆர்வத்துடனும் தியாக உள்ளத்துடனும் செயல்பட அருள்தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. வழிநடத்தும் தந்தையே, எம் நாட்டுத்தலைவர்களுக்காக மன்றாடுகிறோம். உம் பணி செய்ய எலியாவை நீர் அழைத்துச் சென்றதுபோல மக்களுக்காகப் பணிபுரிய எம் தலைவர்களுக்கு நல்ல





தாராள, தியாக உள்ளத்தைத் தந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தந்தையே இறைவா, எம் பிள்ளைகள் வழிதவறி இன்றைய நவீன தொழில்நுட்ப கலைகளில் மூழ்கி சீரழிந்து போகாமல் காத்து, உமது கருணையின் உருவாகிய துறவிகள் மூலம் அவர்களை நல்வழி நடத்தும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. நானே விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வுதரும் உணவு என்றவரே, குடும்பத்தை இழந்து, பெற்றோரை இழந்து, பிள்ளைகளை இழந்து ஆதரவின்றித் தவிப்போரை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். நீரே வாழ்வு தருபவராக இருந்து அவர்களை வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 15.08.2018 அன்னை மரியாவின் விண்ணேற்பு திருப்பலி

**முன்னுரை** திரு. இம்மானுவேல் ஜெயராஜ்

I. தி.வெ. 11: 19,12:1-6,10 II. 1கொரி. 15: 20-26 லூக். 1: 39-56

இறையேசுவில் நம்பிக்கையுள்ள இறைமக்களே, அவமானச் சின்னமான சிலுவையில் தன் குருதியெல்லாம் சிந்தி அச்சிலுவையை வெற்றியின் சின்னமாக மாற்றி நாம் விண்ணகமடைய வழிவகுத்த இறைவன், அவமானப் பிறவியாக ஒதுக்கப்பட்ட பெண் இனத்திலிருந்து மனித இனத்திற்கு மீட்பளிக்க, அன்னை மரியாளைத் தேர்ந்துக்கொண்டு, விண்ணகத்தில் மரியாள் தம் ஆன்ம சரீரத்தோடு வாழவேண்டுமென்ற உயர்ந்த நோக்கோடு, விண்ணகத்திற்கு எடுத்துக் கொண்டார். எனவே தான் இயேசு விண்ணகம் சென்றதை "விண்ணேற்றம்" என்றும் மரியாள் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதை "விண்ணேற்பு" என்றும் விசுவசிக்கின்றோம். இவ்விழாவினை திருத்தந்தை 12ம் பத்திநாதர் நவம்பர் 01,1950ம் ஆண்டில் முழக்கம் செய்தார். இவ்விழாவின் முக்கிய நோக்கம் அன்னை மரியாள் இறந்த பிறகும் உடலோடும், ஆன்மாவோடும் விண்ணிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்பதாகும். அதே நேரத்தில் நம் பாரத மாதாவின் அடிமை விலங்குகள் தகர்த்தெறியப்பட்டு இந்திய மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசித்த நாளை "சுதந்திர தினமாக" இன்று கொண்டாடுகின்றோம். நாம் நம் பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப்பெறவும் மேலும், அன்னை மரியாளைப்போன்று நாமும் அன்போடும் தியாக உள்ளத்தோடும் வாழ பக்தியுடன் இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. பெந்தகோஸ்தே நாளிலே அன்னை மரியாளோடு கூடி செபித்த இயேசுவின் சீடர்கள் தூய ஆவியைப் பெற்று உலகெங்கும் இறைவார்த்தையை எடுத்துரைக்க சென்றதைப்போல், இன்றைய துறவற சபைகளைச் சேர்ந்த இருபால் துறவியரும் ஆன்ம உடல் சுகத்துடன் வாழவும், உலக இச்சைகளுக்கு அடிமையாகாமல்,

இயேசுவின் சீடர்களுக்குத் தாயாக விளங்கிய அன்னையின் பாதுகாப்பில் வாழும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. கிறிஸ்து அரசரே எம் இறைவா, உமது அரசு எவ்வளவு உண்மையுள்ளதாகவும், தூய்மையுள்ளதாகவும் இருக்கிறதோ, அதேப்போல் எங்கள் நாட்டை வழிநடத்தும் மத்திய மாநில அரசுகளும், உண்மையானதாகவும், தூய்மையானதாகவும் இருக்க அருள்பொழிய வேண்டுமென்று விண்ணேற்றம் பெற்ற அன்னையின் பரிந்துரையோடு உம்மை மன்றாடுகிறோம்.

3. திருக்குடும்பத்தை இறைச் சித்தத்தை நிறைவேற்றும் குடும்பமாகவும், இறைவார்த்தையில், பரிசுத்தத்தில் தியாக வாழ்வில் தங்களை அர்ப்பணித்த குடும்பமாகவும், வழிநடத்தி கானாவூர் திருமணத்திலே அவர் சொல்வதைப்போல் செய்யுங்கள் என்று கூறி குடும்ப சூழல் குறைவுபடாமல் காத்த அன்னை மரியாள், எங்கள் குடும்பங்களையும் பக்தி மற்றும் விசுவாசத்தில் வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. நம் இந்திய திருநாட்டின் மக்கள் பிற நாட்டினரிடமிருந்து விடுதலையடைந்தாலும், சாதி, மதம், மொழி, உயர்ந்தவன், தாழ்ந்தவன், வறுமை, பிணி, அறியாமை, போதைப் பொருட்கள், கெட்ட நடத்தை, தன்னலம், பதவி மோகம் போன்ற பற்பல அடிமைத் தளைகளில் சிக்குண்டு, சொல்லொண்ணாத் துயரத்தில் வாழும் அனைவருக்கும், தாயாக இருந்து மீட்பளித்து வழிநடத்திட வேண்டுமென்று இறையன்னை வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 15.08.2018 சுதந்திர தினவிழா செபவழிபாடு

திருமதி. டிலைலா சேவியர்

**தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே...**

**முன்னுரை:** மதிப்பிற்குரிய ஆசிரியப் பெருமக்களே, மாணவ மாணவிகளே, இன்று நாம் 71ம் சுதந்திர தினவிழாவினைச் சிறப்பித்துக் கொண்டிருக்கிறோம். பொருளாதாரம், அறிவியல், கல்வி மற்றும் தொழில் நுட்பம் போன்றவைகளில் முன்னேற்றம் கண்டு வரும் நம் நாட்டில் வறுமையை அகற்றி, சுதந்திரத்தின் உண்மைப் பொருளான அமைதி, மகிழ்ச்சி, அன்பு போன்றவை நம்மிலும் நமது நாட்டிலும் நிலவிட இன்றைய செபவழிபாட்டில் சிறப்பாக செபிப்போம். இப்போது பாடல் வழியாக எல்லாம் வல்ல இறைவனை நமது மத்தியில் அழைப்போம்.

**பாடல்:** இறையாட்சியின் மைந்தர்களே... (இறையலைகள் பாடல் புத்தகம் பாடல் எண் 49)

**விவிலிய வாசகம்: 1பேதுரு 2: 13-17**





அன்பார்ந்தவர்களே, நமது மத்தியில் வந்துள்ள இறைவன் நமக்கு அளிக்கும் இறைவார்த்தைகளைக் கேட்போம்.

**முதல்வர்:** இப்போது நாம் கேட்ட இறைவார்த்தையின் வழியாக துன்பம், தியாகம், அர்ப்பணிப்பு, கடின உழைப்பு போன்றவைகள் இல்லாமல் நாம் எதிர்ப்பார்க்கும் விடுதலையும், மகிழ்வும் பெறமுடியாது என்பதை உணர்வோம். இந்த நற்செயல்களை மாணவ, மாணவிகள் உபகரணங்களின் மூலம் வெளிப்படுத்துவார்கள்.

**தேவையான படங்கள்** அல்லது Bold Flash Cards

1) தேசப்பற்று-தேசியக்கொடி, 2) தியாகம்-இராணுவ வீரர்கள், 3) ஒற்றுமை-இணைந்த கைகள், 4) கடின உழைப்பு-விவசாயிகள், 5) விடா முயற்சி-மலையேறுதல்.

**மாணவ மாணவிகளின் கைகளில் உள்ளவைகளுக்கு விளக்கமும், செபமும்:**

**1.தேசப்பற்று:** பல ஆண்டுகளாக அந்நியரின் ஆட்சியில் பல இன்னல்களை அனுபவித்தபோது, எந்நாடு, எந்நாட்டு மக்கள், என் குடும்பம் சுதந்திரமாக வாழவேண்டுமென்பதற்காக நாட்டு மக்களை ஊக்குவிக்கவும், அடிமைத் தனத்திலிருந்து மக்களை விடுவிக்கவும், நமது நாட்டில் நமது தேசிய கொடியை நிலைநாட்டவும், பாடுபட்ட தலைவர்களை இந்நாளிலே நினைத்துப் பார்ப்போம். இத்தகைய தேசிய உணர்வினை நாமும் நம்மில் நிலைநிறுத்துவோம்.

**2. தியாகம்:** இன்று நாம் பெருமிதத்தோடு ஏற்றி மகிழும் தேசியக்கொடி பலரின் தியாகத்தால் ஏற்றப்பட்டது. குறிப்பாக தன்னுடைய சொந்த வீடு, குடும்பம், மனைவி, மக்கள் அனைவரையும் விட்டு நாட்டிற்காக உழைக்கும் இராணுவ வீரர்களை நாம் இன்று நினைவில் கொள்வது மிகவும் அவசியமாகும்.

**3. ஒற்றுமை:** ஒற்றுமையே வெற்றிக்கு வழி, அந்நாட்களில் நமது நாட்டின் சுதந்திரத்திற்காக உழைத்த தலைவர்கள், வீரர்களிடையே பிரிவுகள், பிளவுகள் இல்லாமல் ஒரே மனிதராயும், ஒரே நோக்கத்தோடு உழைத்ததின் காரணமாகவே நாம் இன்று சுதந்திர தினவிழாவைச் சிறப்பிக்கின்றோம் என்ற உண்மையை உணர்ந்துக் கொள்வோம்.

**4. கடின உழைப்பு:** உழைப்பில்லாமல் உயர்வில்லை, வெறும் வாய்ச்சொற்களில் மட்டும் சுதந்திரம் வேண்டுமென்று கோஷமிடாமல் பல வழிகளில் நாம் சுதந்திரம் அடைய கடினமாக உழைத்த நம் முன்னோர்களின் அயராத உழைப்பினை எண்ணி பெருமிதம் கொள்வோம்.

**5. விடா முயற்சி:** பல ஆண்டுகளாக, பல வழிகளில், பல இன்னல்கள், துன்பங்கள், இடையூறுகளை அனுபவித்தபோதும் எப்படியாவது நம் நாட்டு மக்களுக்கு அந்நியர்களிடமிருந்து விடுதலைப்பெற்று நமது தேசிய கொடியை நமது நாட்டிலே பட்டொளிவீசிப் பறக்க செய்ய வேண்டி விடாமுயற்சியுடன் உழைத்த அனைத்து நல்ல உள்ளங்களையும் இன்று நாம் நினைவில் கொள்வோம்.

**முதல்வர்:** அன்பு மாணவ மாணவிகளே, நாம் இப்போது சிறப்பித்துக் கொண்டிருக்கும் சுதந்திர தினவிழா எத்தனை இன்னல்களாலும், எத்தனை அர்ப்பண உணர்வு கொண்டவர்களாலும் கிடைத்ததென்றும் மற்றும் எப்படிப்பட்ட மனநிலை வேண்டுமென்றும் பார்த்தோம். இவ்வாறாகக் கிடைக்கப்பெற்ற சுதந்திரத்தை என்றும் பேணிக்காத்திடவும், நமக்காக இரத்தம் சிந்தி உயிர் நீத்த தியாகச் செம்மல்களுக்காகவும், இவர்களின் குடும்பங்களுக்காகவும், நாட்டில் அமைதியும், மனதில் உண்மையான, நிலையான சுதந்திரமும் நிலைத்திட இப்போது செபிப்போம்.

**செபம்:** விடுதலையின் நாயகனே இறைவா, நீர் எமக்குத் தந்த சுதந்திரத்திற்காகவும் அதற்குக் காரணமானவர்களுக்காகவும் நன்றி செலுத்துகிறோம். இறைவா, நாட்டில் அனைத்து மக்களும் பாரபட்சமின்றி நீதி, சமத்துவம், சகோதரத்துவம் பெற்று அதனால் உண்மையான சுதந்திர உணர்வை பெறவும், நாட்டுத் தலைவர்கள், நலிந்தோர், ஏழை எளியோர் உரிமையை இழந்தோர் போன்றவர்களுக்கு உறுதுணையாய் இருக்கவும், இன்று சிறப்பிக்கும் சுதந்திர தின விழாவில், இன்றும் நமது இந்திய எல்லையில் நமது நாட்டை பாதுகாக்கும் இராணுவ வீரர்களின் குடும்பத்தினர் அனைவரையும் பாதுகாக்கவும், சுதந்திரம் வெறும் கொடியை பறக்க விடுவதில் மட்டுமல்லாமல் எங்கள் அன்றாட வாழ்வில் நாங்கள் சந்திக்கும் தேவையில்லாத பயம், பதட்டம், வெறுமை, கொத்தடிமை, சிறுவர் தொழிலாளர்கள், ஏமாற்றம், கோபம், வெறுப்பு போன்ற எல்லாத் தீயப் பண்புகளிலிருந்தும் எங்களை வறுத்தும் துயரங்களிலிருந்தும் விடுதலை அளித்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**முதல்வர்:** அன்பு மாணவச் செல்வங்களே, பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காப்போம், நலிந்தோரைப் பாதுகாக்கும் உன்னத இந்திய சுதந்திரம் நம்மில் என்றும் நிலைத்திட நாம் என்ன செய்தோம்? என்ன செய்யப் போகிறோம் என்ற வினாவை மனதில் கொண்டு, தேசியப் பாடலைப் பாடுவோம்.

**தேசியகீதம்:**

## 19.08.2018 ஆண்டின் பொதுக்காலம் 20ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. நீமொ. 9: 1-6 II. எபே. 5:15-20 யோவா. 6: 51-58

இறையேசுவில் பிரியான சகோதரர்களே சகோதரிகளே, இன்று பொதுக்காலத்தின் 20ம் ஞாயிறு திருப்பலியில் கலந்துக்கொள்ள இறைவன் முன்னிலையில் நாம் ஒன்று கூடியிருக்கிறோம். இன்றைய முதல் வாசகம் "வாருங்கள் நான் தரும் உணவை உண்டு, நான் கலந்த திராட்சை இரசத்தைப் பருகுங்கள் அப்போது வாழ்வீர்கள், இவ்விதம் வாழும்போதுதான் விவேகம் உள்ளவர்களாக மாறுவீர்கள், அவ்வாறு செயல்படுவதுதான் ஞானம்" என்று கூறுகின்றது. இரண்டாம் வாசகம்





ஞானமற்ற அறிவிலிகளாய் இல்லாமல் ஞானிகளாய் வாழ வேண்டும், ஞானம் உடையோர் கவனம் பெறுவதிலும் ஆய்வு செய்வதிலும் வளர்கிறார்கள். மேலும் கொடுக்கப்பட்ட நேரத்தை நன்மை செய்வதற்காகச் செலவிட வேண்டுமென்று நம்மை அழைக்கிறது. இன்றைய நற்செய்தியில் இயேசு தனது உடலையும் இரத்தத்தையும், உணவாக நமக்கு அளிக்கிறார். இதன் மூலம் இயேசு கடவுள்மீது கொண்ட அன்பை நாம் அறிய முடிகிறது. இயேசுவின் தாழ்ச்சியான உள்ளமும் கீழ்ப்படியும் குணமும் நமக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாகும். இயேசு கடவுளின் விருப்பத்திற்கேற்ப தன்னை இழந்தார். கடவுளோ அவரை உயிர்ப்பித்து மாட்சிபெறச் செய்தார். நாமும் கடவுளுக்காக நம்மை இழப்போம், நமது குடும்ப உறுப்பினர்களின் நலனுக்காக முதலில் நம்மை இழப்போம், அடுத்து நமது தியாக வாழ்வின் மூலம் நமக்கு அருகில் இருக்கும் ஏழைகள் ஏற்றம்பெறச் செய்வோம் என்ற உணர்வுடன் இத்திருப்பலியில் பங்கு கொள்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் உமது பிரதிநிதிகள் என்ற நிலையில் அவர்கள் தங்களது சொந்த ஊரிலும் நாட்டிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு உமது ஆற்றல்மிக்க செயல்களைத் தங்கு தடையின்றிச் செய்திட உமது அருளைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவே, எங்கள் இந்திய நாடு பல இனங்களையும், பண்பாடுகளையும், பன்முகத்தன்மையையும் கொண்ட ஒரே நாடு. ஆனால் எங்களை ஆளும் தலைவர்கள் எல்லா மக்களையும் அரவணைத்துச் செல்லாமல் பாகுபாடுகளுடன் நடந்துக்கொள்வதை விட்டுவிட்டு எல்லா மக்களும் நிறைவான வாழ்வு வாழும் வகையில் திட்டங்கள் பல வகுத்து செயல்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. கொடை வழங்கும் போதெல்லாம் முகமலர்ச்சியோடு கொடு என்று கூறிய இறைவா, இன்று கொடுக்கும் குணம் நிறைந்தவர்களிடையே பிடுங்கும் உள்ளங்களே மலிந்து கிடக்கின்றன. பிறர் தேவையைப் போக்க, கொடுக்கும் வள்ளல் குணம் உள்ளவர்களாக செல்வம் படைத்த மக்களை மாற்றியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. நற்கருணை நாதரே, நற்கருணையின் மூலம் சாதி, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து ஒரே குடும்பமாக எங்களை ஒருங்கிணைத்த இறைவா, நாங்கள் உம் வழி நடந்து உமது அருள் வாக்கினைக் கேட்டு, உமது திருவுடலை உண்டு எந்நாளும் அறிவொளி வீசுபவர்களாகவும், ஞானிகளாகவும் வாழ்ந்து பிறரோடு அன்புறவில் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 22.8.2018 அரசியான புனித கன்னி மரியா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

இறை இயேசுவிலும், அன்னை மரியாவிலும் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, இன்று நமது தாயாம் திருஅவை "அரசியான கன்னி மரியா" என்ற பெயரை மரியாளுக்குச் சூட்டியப் பெருநாளைக் கொண்டாடுகிறது. புனித இரண்டாம் அருள் சின்னப்பர் விசுவாசக் கோட்பாடாகப் பிரகடணப்படுத்திய செபமாலையின் 5வது மகிமைப் பேருண்மையில் "கன்னிமரியா விண்ணக மண்ணக மகாராணியாக மகுடம் சூட்டப்பட்டதை" தியானிக்கிறோம். "வானில் பெரியதொரு அடையாளம் தோன்றியது. பெண் ஒருவர் காணப்பட்டார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். நிலா அவருடைய காலடியில் இருந்தது. அவர் பன்னிரு விண்மீன்களைத் தலையில் சூடியிருந்தார்" (திவெ 12:1) என தொடக்கத்திலேயே முன் குறிக்கப்பட்டதை அறிகிறோம். "கன்னிமை குன்றா அரசி" என புனித எப்ரேமும், "பூவுலகையாளும் அரசரை ஈன்ற அன்னையே" என புனித கிரகோரி ஓசியான்சனும், "மனுக்குலத்தின் அரசியே" என க்ரேத்தே நகர் புனித ஆன்ட்ருவும் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்.

தேவமாதா இவ்வுலகத்தை விட்டு விண்ணகம் எடுத்துச் சென்றபோது, ஒன்பது சபைகளின் வானதூதர்களும், வான் வீட்டில் வாழும் புனிதர்களும், கன்னிமரியாவை மகிழ்வுடன் வரவேற்றனர். தந்தையாகிய கடவுள், தமது பிரியமுள்ள அன்புமிக்க அன்னை மரியாவை ஏற்றுக்கொண்டு உலக மீட்பரின் வலது பக்க சிம்மாசனத்தில் அமரச் செய்தார். மூவொரு கடவுளர், கன்னி மரியாவுக்கு மூவுலக மகாராணியாக மகுடம் சூட்டிட வானகமே விழாக் கோலம் கொண்டாடியது.

"நான் ஆண்டவருடைய அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று கூறி தன்னையே தந்தைக்கும் தரணிக்கும் அர்ப்பணித்த அந்நாள் முதல், விண்ணுக்கும், மண்ணுக்கும் மகாராணியாக மகுடம் சூட்டும்வரை இறைவழியே என் வழி என வாழ்ந்தார் அன்னைமரியா. அயலான் அன்பு, தாயன்பு, பரிந்து பேசுதல், கீழ்ப்படிதல், வேதனை, சோதனை, எல்லாம் இறைத்திருவுளம் என ஏற்று அன்னை வாழ்ந்ததுபோல நாமும் வாழ்வோம் என வாக்களித்து பக்தியோடு இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நல்லாயனே இறைவா, தூய பேதுருவின் வழித்தோன்றலான திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், பொதுநிலையினர் தங்களுடைய விசுவாச வாழ்க்கையை உணர்ந்து தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களையும் விசுவாசத்தில் வழிநடத்தி, இறைத்திருவுளம் அறிந்து வாழ்வதற்கான வரங்களை அளிக்க இறைவா உம்மை மன்றாடுகிறோம்.





2. அமைதியின் தெய்வமே இறைவா, இறைவனின் அன்னைக்கு ஒவ்வொரு நாளும் செபமாலை செபித்து, எங்கள் குடும்பங்களிலும், சிரியாவிலும் உலகமனைத்திலும் அமைதியும், ஒற்றுமையும், சமாதானமும் நிலவத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கத்தின் ஆண்டவராகிய இறைவா, எமது தாய் நாட்டில் இயேசுவின் படிப்பினைகளின்படி வாழும் மக்களை இரக்கத்துடன் கண்ணோக்கி, வழிநடத்தத் தேவையானத் தலைமைப் பண்புகளுள்ள தலைவர்கள் உருவாக வேண்டிய வரங்களைத் தந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 24.8.2018 புனித பர்த்தலமேயு திருத்தூதர் திருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

இறையேசுவில் அன்புள்ளம் கொண்ட இறைமக்களே, நம் திருஅவையானது புனித பர்த்தலமேயு திருவிழாவினை இன்று தியானிக்க அழைக்கின்றது. "இவர் கபடற்றவர்" என இவரைக் குறித்து இறை இயேசு புகழாரம் சூட்டியதை நாம் சற்று ஆழமாக சிந்திக்க வேண்டும். உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றுமாக பேசுவோர் மத்தியில் கபடற்றவராக அனைவரின் முன்பும் நடந்துக் கொண்டார் என்பது நமக்குப் பெரிய எடுத்துக்காட்டு. இவரது புனித வாழ்க்கையில் "இவர் கபடற்றவர்" என்பதை ஒவ்வொரு வினாடியும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும். இப்புனிதர் புனித மத்தேயு நற்செய்தியில் இறை இயேசுவால் தேர்ந்துக் கொள்ளப்பட்ட 12 சீடர்களில் ஆறாம் இடத்தில் வருகிறார். பர்த்தலமேயு என்றால் தாலோமியின் மகன் என பொருள். இவரைத்தான் தூய யோவான் நற்செய்தியில் சந்திக்கின்றோம் (1:47). இறை இயேசுவை சந்திக்கும் முன் "நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வருமோ" சந்தித்தப்பின் "ரபி நீர் இறைமகன், நீர் இஸ்ரயேல் மக்களின் அரசன்" என முழு நம்பிக்கையோடு ஆணித்தரமாக உரைத்தவர்.

இவர் கானாவூரைச் சேர்ந்தவர். கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக இவரின் திருப்பண்டங்கள் உரோமையில் டைபர் நதிக்கரையில் உள்ள தேவாலயத்தில் புனிதமாக வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் மாறுபட்ட கருத்தும் உள்ளது. அரேபியாவில் நம்பிக்கையை விதைத்து பின் அர்மீனியாவில் எரித்துக் கொல்லப்பட்டதாகவும் கருதப்படுகிறது. மாறுபட்ட கருத்து இருப்பினும், நாம் எடுத்துக் கொள்ள வேண்டியது, விண்ணேற்புக்குப் பின் இறைக் கட்டளையை ஏற்று உலகெங்கும் சென்று நற்செய்திக்குச் சான்று பகர்ந்ததை இறை இயேசு இவரிடம் "இதைவிட பெரியவற்றைக் காண்பீர்" என முன்னறிவித்தது புனித யோவான் 21:14ல் நிறைவேறுவதை நாம் காணலாம். நாமும் வேறுபாடுகளில் முழு நம்பிக்கைக் கொண்ட மக்களாக இறைவனால் "இவர் கபடற்றவர், பெரியவற்றைக் காண்பாய்" என நம்மை அழைக்க இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள் இருபால் துறவறத்தார் அனைவரும் புனித பர்த்தலமேயுவைப்போல் கிறிஸ்துவின் நம்பிக்கை ஒளியை அனைத்து மக்களிலும் ஒளிரச் செய்ய வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பு இறைவா, உம் திரு அவைக்கும் இச்சமூகத்திற்கும் பணிபுரிய பலரை அழைத்துள்ளீர், அவர்கள் அனைவரும் புனித பர்த்தலமேயுவைப்போல் பணிபுரிந்து மக்களுக்கு உறுதியை அளித்து பெரிய கொடையாம் "கபடற்றவர்" என்னும் கொடையைப் பெற்றவர்களாக வாழ நீர் ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. ஆறுதலே இறைவா, இன்று எம் நாட்டில் நடக்கும் மக்களுக்கு விரோதமான சமூக அநீதிகளை அகற்றி உம் கருணையால் அனைத்து மக்களும் மகிழ்வான வாழ்வு வாழ அருள்புரிய உம்மை மன்றாடுகிறோம்
4. குணமளிக்கும் வள்ளலே எம் இறைவா, எம் பங்கிலுள்ள நோயாளிகளை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். உமது திருத்தூதர்களின் பரிந்துரையால் இவர்களுக்கு நல்ல உடல்நலத்தையும், மனவலிமையையும் தந்து, வாழ்வில் உம்மையே பற்றிக்கொள்ளும் பேற்றினை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 25.8.2018 அருளாளர் மரிய ட்ரொங்காட்டி திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

கிறிஸ்துவில் அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே, இன்று திரு அவையானது சலேசிய சபையைச் சேர்ந்த அருளாளர் மரிய ட்ரொங்காட்டி அவர்களின் திருவிழாவைக் கொண்டாட நம்மை அழைக்கிறது. இவர் இத்தாலி நாட்டில் கார்டெகோ கோல்ஜி (ப்ரேசியா) நகரில் 1883 பிப்ரவரி மாதம் 16ம் நாள் பிறந்தார். இவர் இளமைப்பருவத்திலிருந்தே தனது கடின உழைப்பால் மகிழ்ச்சியோடு வாழ்ந்தார். தினமும் அருட்தந்தையரிடம் மறைக்கல்வி கற்று இறை நம்பிக்கையில் வளர்ந்தார். முதல் உலகப் போரின்போது (1915-1918) சிஸ்டர். மரியா வராஜ்லில் சுகாதாரப் பாதுகாப்பு பயிற்சியை முடித்து இராணுவ மருத்துவமனையில் செஞ்சிலுவைச் செவிலியராகப் பணியாற்றி வந்தார். இந்த மருத்துவ அனுபவம் ஈக்குவேடார் அமேசான் காட்டுப்பகுதியை ஒட்டியுள்ள ஊர்களில் இயேசுவைப் பற்றி அறிவிக்கும் சலேசிய மிஷினரியாக (மறைப்பணியாளராக) இவரை உயர்த்தியது.

அங்குள்ள மக்களுக்கு இறைத் தந்தையின் அன்பு மற்றும் அன்னை மரியாவின் தாழ்ச்சியைப் பற்றிக் கூறி பெண்ணாக இருந்தாலும் கல்வாரிநாதரின் திருமுகத்தைப் பார்த்து சக்தி பெற்றவளாக





மகிழ்ச்சியுடன் இறைப்பணி, மருத்துவப்பணி இரண்டின் மூலம் நம்பிக்கை இழந்தவர்களுக்கு "சிறிய தாயாக" காட்சியளித்தார். 1960ல் இயற்கை வளங்களைச் சுரண்டும் வெள்ளைக்கார குடியேற்றக்காரர்களுக்கும் சுகூயா பகுதி மக்களுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையின் போது சலேசியன் மிஷினரியாக பாதிக்கப்பட்ட சுகூயா மக்களுக்காகக் குரல் கொடுத்தார். 1969 ஆகஸ்டு 25ம் தேதி அதுவாவில் ஏற்பட்ட விமான விபத்தில் அருளாளர் மரணமடைந்து அவரின் திருவுடல் மண்ணில் விழுந்த போது மோதல், சண்டைச் சச்சரவுகளும் வீழ்ந்து சிதறிப்போயின. 2008ம் ஆண்டு நவம்பர் 8ம் நாள் "கடவுளின் ஊழியர்" என்று அழைக்கப்பட்டார். பொறுமை, சகோதரத்துவம் ஆகியவற்றில் நாம் செல்வந்தர்களாக மாற அருளாளரின் துணையோடு இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நன்மைகளின் நாயகனே இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் உமக்கேற்ற வாழ்க்கை வாழ்ந்து எல்லோருக்கும் நன்மை செய்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. அரசர்களுக்கெல்லாம் அரசே எம் இறைவா, உமது மக்களைச் செம்மையாய் வழிநடத்த உம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்ட எம் தலைவர்கள் உமது அரசை இப்பூமியில் தழைக்கச்செய்ய வேண்டிய ஞானத்தையும், வல்லமையையும் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
3. குணமளிக்கும் இறைவா, அருளாளர் மரிய ட்ரொங்காட்டியின் மருத்துவ சேவை ஏழை எளிய மக்களுக்கு நற்சுகமளித்தது மட்டுமல்லாமல், இறை நம்பிக்கையிலும் அவர்கள் வேரூன்றி நிற்கச் செய்தது. அதைப்போல் நாங்களும் உடல் அளவிலும் மனதளவிலும் சுகம்பெற்று விசுவாசத்தில் வளர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 26.08.2018ஆண்டின் பொதுக்காலம் 21ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I. யோசு. 24:1-2.15-17,18 II. எபே. 5:21-32 யோவா. 6: 60-69

இறையேசுவில் அன்பு நிறை இறைமக்களே, ஆண்டின் பொதுக்காலம் 21ஆம் ஞாயிறான இன்றைய முதல் வாசகத்தில் கடவுள் தம் வார்த்தைகளில் உண்மையுள்ளவர் என்பதை உணரும்படி யோசுவா அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறார். இஸ்ரயேல் மக்கள் உண்மைக் கடவுளைத் தேர்ந்தெடுப்பதா (அல்லது) வேற்று தெய்வத்தைத் தேர்ந்தெடுப்பதா என்பது பற்றி முடிவு செய்ய இஸ்ரயேலின் இதயங்களைத் திறக்கின்றார். நமது கிறிஸ்துவ வாழ்விலும், குடும்ப வாழ்விலும் நாம் கொடுத்துள்ள வாக்குறுதிகளை பின்பற்றும்போது நாம் நல்ல

கிறிஸ்தவர்களாக வாழ்கிறோம். இத்தகைய அழைப்பை புனித பவுல் இன்றைய இரண்டாம் வாசகத்தில் நமக்கு எடுத்துரைத்து அதன்படி வாழவும் அழைப்பு விடுக்கிறார்.

இன்றைய நற்செய்தியில் இரண்டு வகையான நபர்கள் முன்மாதிரியாகக் கொடுக்கப்பட்டுள்ளனர். முதலாவதாக இயேசுவின்மீது நம்பிக்கைக் கொண்டவர்கள். இரண்டாவது இயேசுவின்மீது நம்பிக்கையற்றவர்கள். இங்கு புனித பேதுரு நமக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறார். அவர் "யாரிடம் செல்வோம், நிலை வாழ்வளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன" என்று கூறுகிறார். நம்முடைய அன்றாட வாழ்வில் எந்த அளவிற்கு நம்முடைய வாக்குறுதியில் நிலைத்து நிற்கிறோம் என்பதை எண்ணிப் பார்ப்போம். அரசியல், பொருளாதார நிலையில் நம்முடைய வாக்குறுதி எந்தளவிற்கு உண்மையுள்ளதாக இருக்கின்றது என்பதை எண்ணிப் பார்ப்போம். விசுவாசத்தை அறிக்கையிடுவதோடு நில்லாமல் விசுவாச வாழ்விலும் நிலைத்திருக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, உமது திருஅவையை வழிநடத்திக்கொண்டிருக்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவருக்கும் நல்ல ஆன்ம, உடல் நலம் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. திருஅவையின் தலைவரே இறைவா, குடும்பங்களாகிய குட்டித் திருஅவைகளில் ஒருவருக்கொருவர் அன்போடும், பாசத்தோடும் விட்டுக்கொடுத்து வாழவும், தங்களின் துன்ப துயர நேரங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மட்டும் நாடவும் வேண்டிய விசுவாசத்தை தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பே உருவான இறைவா, நிலைவாழ்வு ஒரு நிறைவாழ்வு என்பதை உணர்ந்து சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் நன்முறையில் கடைப்பிடித்து வாழ்வில் தன்னையே நமக்கு உணவாக அளித்த இயேசுவின் அன்பை உணர்ந்தவர்களாய் இயேசுவையே நம்முடைய வாழ்வாக்கும் வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, நாங்கள் யாரிடம் செல்வோம், வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன என்று உம்பாதம் அண்டிவரும் அனைத்து நோயாளிகளையும் ஆசீர்வதித்து, அவர்கள் தங்கள் நோய்களைத் தாங்கிக்கொள்ளும் மனதிடத்தையும், உடல்வலிமையையும் தந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.





## 28.8.2018 புனித அகுஸ்தீன் ஆயர் திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறையேசுவில் அன்புள்ள சகோதரிகளே சகோதரர்களே, இன்று திருஅவையானது புனித அகுஸ்தினாரின் திருவிழாவைக் கொண்டாடி மகிழ்கிறது. புனித அகுஸ்தினார் கி.பி. 354ம் ஆண்டு நவம்பர் 13அன்று வடக்கு ஆப்ரிக்காவிலுள்ள தகாஸ்தே என்னும் ஊரில் பிறந்தார். தாயார் பெயர் மோனிக்கா, தந்தை பெயர் பத்ரீசியுஸ். இந்தப் புனிதர் கல்வி கற்கும்போது தவறான முறையில் தன் வாழ்வைச் செலவிட்டார். இவரது அன்னை மோனிகா இவரை நல்வழிப்படுத்த பல முயற்சிகள் எடுத்தபோதும் இவர் திருந்தவில்லை. சிசரோ இலத்தீன் மொழியில் எழுதிய ஹோர்னெசியஸ் என்ற நூலை 19ஆம் வயதில் புனித அகுஸ்தினார் ஆவலுடன் வாசித்தார். இக்காலக்கட்டத்தில் மறைநூலையும் கற்றார். தாய் மோனிக்கா தமது மகனுக்காக இடைவிடாது செபித்துக்கொண்டே இருந்தார். புனிதர் கி.பி. 383ஆம் ஆண்டில் ஆயர் அம்புரோஸ் அவர்களைச் சந்தித்தார். இச்சந்திப்பு அகுஸ்தினாரின் வாழ்வில் மறக்க முடியாத ஒன்றானது.

ஆயர் அம்புரோசின் மறையுரையின்மீது மிகுந்த தாகம் கொள்ள ஆரம்பித்தார். தமது 30 வயதில் மறைநூலைப்படித்து கிறிஸ்தவ விசுவாசத்தை ஏற்றுக்கொண்டார். கி.பி. 390ல் குருப்பட்டம் பெற்றார். ஒருநாள் பூங்கா ஒன்றில் புனிதர் தனியாக இருந்தபோது ஒரு சிறுவன், "எடுத்துவாசி... எடுத்து வாசி..." என்று சொல்லியபடியே இருந்தான். உடனே அருகில் இருந்த விவிலியத்தை எடுத்து படித்த போது புனிதரின் கண்ணில் பட்ட இறைவார்த்தை "இரவு முடியப்போகிறது, பகல் நெருங்கி உள்ளது. ஆகவே, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணிந்து கொள்வோமாக" (உரோ. 13:12) என்பதாகும். நாமும் இப்புனிதரைப் பின்பற்றி ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணிந்தவர்களாய் இத்திருப்பலியில் கலந்து கொள்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாய் வயிற்றின் கருவிலேயே எம்மைத் தேர்ந்துக்கொண்ட இறைவா, எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவியர், திருநிலையினர் அவரவர் கருவில் உறையும் காலத்தே தேர்ந்தெடுத்துள்ள நீர் அவர்களது பணியும் வாழ்வும் உமது சித்தத்தை நிறைவு செய்யும் விதத்தில் அமைந்திட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. எம் இதயத்தை உறுதிப்படுத்தும் இறைவா, எங்களையாளும் தலைவர்கள் ஏழை மக்களின்பால் இரக்கம் கொண்டு திட்டங்கள் வகுத்து செயல்படவும், தமக்குக் கொடுக்கப்பட்ட நிலையை அறிந்து மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யக்கூடிய நல்ல இதயத்தை அவர்களுக்குத் தந்தருளவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இருளகற்றும் ஒளியே, "ஆண்டவரே, எனக்குக் கற்பு என்னும் புண்ணியத்தைத் தாரும்" என்று செபித்த புனித அகுஸ்தினார் வழியில் எம் இளம்பிள்ளைகள் தங்களது கற்புக்கு எதிரான பாவங்கள், பாவச்சூழ்நிலைகளை விட்டுவிட்டு மனமாற்றம் அடைந்து திருந்தி வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2 விசுவாசத்தில் வளர...

## மரியாவின் விண்ணேற்பும் - விடுதலையும்

திரு. புல்லோன் ஜோ. லூயிஸ்

மரியாளின் விண்ணேற்பு விழா, இயேசுவின் உயிர்ப்பில் நாம் பங்கெடுக்கின்றோம் என்பதை உறுதிபடுத்தும் விழா. இயேசுவில் நம்பிக்கையுடையோர்க்கு இறப்பில்லை எனப் பறைசாற்றும் விழா. இறந்தாலும் உயிர்பெற்றெழுவீர் எனக் கூறும் விழா. இயேசுவின் மாட்சிக்கும் மணிமகுடத்திற்கும் நவரத்தினக் கல்லைப் பதிப்பதுபோல் மரியன்னையின் விண்ணேற்பு அமைந்துள்ளது. மரியாள் ஒரு சாதாரணப் பெண்ணல்ல, அவள் இறைவனின் தாய். மானிட மீட்பரைப் பெற்றெடுத்தவள். மீட்புத் திட்டத்தில் அவரோடு முழுமையாக ஒத்துழைத்தவள். இறைவனின் ஓர் அழகிய ஒப்பற்ற படைப்பு. மனிதன் என்றாலே பாவமும் பழியும்தான் என்பதை மாற்றியவள். உலகினை மீட்கவந்த இயேசு தூய்மையானவர். அப்படிப்பட்டவர்க்கு உடல் கொடுத்த மரியாளும் அவரைப் போலவே தூய்மையும், தனித்துவமும் உள்ளவராய் இருக்க வேண்டுமென இறைவன் விரும்பினார். பாவம் அற்றவராக அவரைப் பிறக்க வைத்தார். பாவத்திலிருந்து காத்தார். மனிதர்கள் அனைவரும் இயேசுவால் மீட்கப் பட்டவராயினும், மரியாள் தந்தையால் மாண்புடன் காக்கப்பட்ட அமல உற்பவி."

**"இயற்கையில் பிறப்பு என்பது இனிமையான இன்பம், இறப்பு தாங்க முடியாத துன்பம்."**

இறப்பு என்றாலே இழப்பு, அழிவு, துன்பம். அன்னை மரியாளின் இறப்போ, அவளின் அழியாத உடலோடு, வாழ்வின் உச்சத்திற்கே வலிமையோடு எடுத்துக் கொள்ளப்பட்டதை நினைவுப்படுத்துகிறது. இவ்வுலக வாழ்வோடு நம் வாழ்வு முடியவில்லை. மாறாக நாம் அனைவருமே மரியாளைப் போல் விண்ணக வாழ்விற்காகத்தான் படைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதன் முன் அடையாளமாகவே அன்னையின் விண்ணேற்பு அமைகிறது. அன்று மரியாளின் இறுதி வாழ்வு விண்ணேற்புடன் நிறைவு பெற்றது என்று நம்பிய இறைமக்கள், கி.பி 4-ம் நூற்றாண்டிலிருந்து விண்ணேற்பு அன்னைக்கு விழா எடுக்க ஆரம்பித்தனர். கி.பி 5-ம் நூற்றாண்டில் எருசலேமில் ஆகஸ்ட் 15-ம் நாளன்று இவ்விழா கொண்டாடப்பட்டது. கி.பி 6-ம் நூற்றாண்டு முதல் மரியாளின் விண்ணக





பிறப்பு நாளாகவும், கி.பி 8-ம் நூற்றாண்டு முதல் ஆகஸ்ட் 15-ம் நாள் மரியன்னையின் விண்ணேற்பு விழாவாகவும் கொண்டாடப்பட்டது. 1922ம் ஆண்டு திருத்தந்தை 11-ம் பத்திநாதர் பிரான்சு நாட்டை விண்ணேற்பு அன்னையின் பாதுகாப்பில் ஒப்படைத்தார். 1950-ம் ஆண்டு நவம்பர் 1-இல் திருத்தந்தை 12-ம் பத்திநாதர் அன்னை மரியாள் ஆன்மா மற்றும் உடலோடு விண்ணேற்பு அடைந்தாள் என்னும் மறையுண்மையைப் பிரகடணப்படுத்தினார்.

ஆம், அன்னை தம் உடலை மதித்து உடலில் பெற்ற கடவுளின் கொடையான வாழ்வை மனித நேயத்துடன் இறைத்திருவுளத்திற்கேற்ப வாழ்ந்து, சந்தித்த சோதனைகள், துன்பங்கள், முரண்பாடுகள் அனைத்திலும் மூழ்கிப்போய்விடாமல், தம் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும் இறைவனை அன்பு செய்யாமல், தம் முழு உடல் வாழ்வையே இறைவனுக்கு அர்ப்பணித்து வாழ்ந்ததால் மரியாவின் உடலும் ஆன்மாவும் புனிதம் பெற்றன. இம்முழு மனித மீட்பான விண்ணேற்பையே தம் அன்னைக்கு இயேசு மணிமகுடமாக்கினார்.

இறைவன் தன் மகள் மரியாளை **"அமல உற்பவி", "எப்போதும் கன்னியானவள்"** எனும் உண்மையின் அடிப்படையில் அன்னையின் மண்ணக வாழ்வு முடித்ததும் அவளை ஆன்ம உடலோடு விண்ணகத்திற்கு எடுத்துக் கொண்டார். மரியாளின் இந்த விண்ணேற்பு, தனிமனித அடிமைத்தனம், சமூக அடிமைத்தனம் என்ற இருவேறு அடிமைத்தனங்களிலிருந்து விடுதலை அடைந்ததைக் குறிக்கிறது. தனிமனித விடுதலையைக் காட்டும் விதமாக, மரியாள் இம்மண்ணுலக வாழ்வின் எல்லாவகைத் தீமைகளிலிருந்தும் விடுதலையானாள் என்பதைக் குறிக்கிறது. எனவேதான் அவள் அமல உற்பவி, எப்பொழுதும் கன்னி என்று அழைக்கப்படுகிறாள். அதைவிட மேலாக அவள் அருளில் வாழ்ந்தவள். என்பதை கபிரியேல் தூதரின் "அருள் மிகப் பெற்றவரே வாழ்க" என்ற கூற்றிலிருந்து வெளிப்படுகிறது. இன்னும் ஒருபடி மேலாக மரியாளின் விடுதலைக் கீதம் (லூக் 1: 45-55). தெள்ளத் தெளிவாக்குகிறது.

"இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவள் என்பர், கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் பல செய்துள்ளார்" (லூக்.1: 47-49). மரியாள் சமூக அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலையானாள், அவள் வாழ்ந்த யூதசமூகம், பலவகை அடிமைத்தனங்களில் மூழ்கியிருந்தது. பெண்ணடிமைத் தனம், சட்ட அடிமைத்தனம், சமய அடிமைத்தனம், பொருளாதார அடிமைத்தனம் என இந்த அடிமைத்தனங்களிலிருந்து அந்த சமூகத்தை விடியலுக்கு அழைத்துச் செல்லத்தான் மரியாளின் மகன் இயேசு புறப்பட்டார். இந்த விடுதலைப் போராட்டத்தில் அவளின் மகன் இயேசு தன் இரத்தத்தைச் சிந்தி உயிரையும் கொடுத்தார். அதனால் "அவரின் போதனை ஓர் புரட்சிப் போதனை, அவரின் சாவு ஒரு புரட்சியாளரின் சாவு".

இயேசு ஒரு புரட்சியாளர். எனவேதான் ஏழைகளையும், அனாதைகளையும், பெண்களையும், குழந்தைகளையும், பல்வேறு அடிமைத்தனத்திற்குட்படுத்தி, கொடுமைப்படுத்தி வந்த ஆட்சியாளர்களுக்கு எதிராகப் புரட்சி செய்து, அந்த புரட்சியால் தன் இரத்தம் சிந்தி, உயிரைக் கொடுத்து, அந்த யூத சமூகத்திற்கு விடுதலையளித்தார். இந்த புரட்சிச் சிந்தனையும், துணிவும் இயேசுவிற்கு கண்டிப்பாக அவரின் தாய் மரியாளிடமிருந்து தான் கிடைத்திருக்கும், காரணம் ஒரு தாய் தன் குழந்தையை மார்போடு அணைத்து பால் கொடுக்கும்போது, அவள் வெறும் உடல் சக்திக்கான பாலை மட்டும் கொடுக்கவில்லை, அதோடு தன் குணநலன்கள், பண்புகள், பண்பாடுகள், புரட்சிச் சிந்தனைகளையும் சேர்த்து ஊட்டுகிறாள். இவ்வாறு மரியாளின் விண்ணேற்புப் பெருவிழா தனிமனித விடுதலையையும், சமூக விடுதலையையும் குறிக்கிறது. ஆம், ஒரு மனிதன் சமூகத்தின் தீமைகளிலிருந்து விடுதலைப் பெறவேண்டும் என்றால், அவன் தன்னிலே விடுதலையடைந்தவனாக இருக்க வேண்டும்.

"தனிமனித விடுதலையே - சமூக விடுதலைக்கு வித்தாகும், சமூக விடுதலையே - தனிமனித விடுதலையின் சொத்தாகும்." இத்தகைய அடிமைத்தனங்களை வேரோடு அழிக்க தனிமனிதனோடு, நம் சமூகமே விழித்தெழுந்து, வெகுண்டெழுந்து போராட வேண்டும். ஆம் அடுத்தவரின் விடுதலைக்காக, "காயங்களை ஏற்போம். தழும்புகளைச் சுமப்போம்." அப்போதுதான் அன்னை மரியாளைப் போன்று பெண்களுள் ஆசீர்வதிக்கப்பட்டவளாக, மனிதருள் மாணிக்கங்களாக வாழ்வோம். அதுதான் விண்ணேற்பு வாழ்வின் அர்த்தமாகும்.

## அருளாளர் செப்பரீனோ நமுங்க்குரா - வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

அர்ஜென்டீனாவின் ரீயோ நீக்ரோ பகுதியில், சிம்பேய் என்னுமிடத்தில் அரோக்கன் பழங்குடியினரின் தலைவராயிருந்த மனுவேல் நமுங்க்குராவுக்கும் ரொசாரியோவுக்கும் ஆகஸ்டு 26, 1886ல் ஆறாவது மகனாக மொராலெஸ் நமுங்க்குரா பிறந்தார். மொராலெஸ் பின்நாளில் செப்பரீனோ என பெயர் மாற்றப்பட்டார். ஒரு பழங்குடியினரின் குடும்பத்தில் பிறந்தவர் பிற்காலத்தில் ஒரு புனிதத்தின் முன்னோடியாய் திகழ்வார் என்பதற்கு சான்றாக அமைந்தது அவருடைய குழந்தைப்பருவம். தன் மூதாதையரின், தன் பழங்குடியின் பின்புலம் பற்றி அறிந்திருந்த சிறுவன் செப்பரீனோ, தானும் ஒரு போர் வீரனாய் உருவெடுக்க வேண்டும் என்று எண்ணியதுண்டு.

தன் பழங்குடியின் பிற்காலத்திற்கு இவனே வித்திட வேண்டும் என்ற நம்பிக்கையில் 1897ல் தன் மகனை புலோன்ஸ் ஏர்வாவில் ராணுவப் பள்ளியில் சேர்த்தார் மனுவேல். தொடக்க முதலே அதில் ஆர்வமில்லாத





செப்பரீனோவின் மனது வேறெதையோ நாடியவாறு இருந்தது. இதை உணர்ந்த மனுவேல் செப்பரீனோவை அதே பகுதியிலிருந்த சலேசியப் பள்ளி ஒன்றில் சேர்த்தார். அன்பும் அரவணைப்பும் புரிதலும் முழுமையாய் அறிந்திருந்த அந்த சலேசியப்பள்ளி, செப்பரீனோவுக்கு மகிழ்ச்சியளித்தது. அடிப்படையில் செப்பரீனோ பக்தி முயற்சிகள், மறைக்கல்வி, அருட்சாதனங்கள், நற்கருணைப் பக்தி, செப ஆர்வம் ஆகியவற்றில் நாட்டம் உள்ளவனாய் இருந்ததை அப்பள்ளியில் இருந்த சலேசியர்கள் கண்டுகொண்டனர். சக மாணவர்களோடு ஒத்து வாழ்வது, கட்டுப்பாடுகளோடு இருப்பது போன்றவை சுதந்திரமான பழங்குடி வாழ்க்கையில் வளர்ந்த செப்பரீனோவுக்கு, முதலில் நடைமுறைக்கு ஒவ்வாதவையாக இருந்தாலும், காலப்போக்கில் இவற்றை உள்வாங்கி மற்ற மாணவர்களுக்கு முன்மாதிரியாய் பேசப்படும்படி வளர்ந்தார் செப்பரீனோ.

**செப்பரீனோ வாழ்ந்த வாழ்க்கையின் சிறப்புக்கு பின்வரும் ஒரு சில சான்றுகளைக் கூறலாம்.**

**போலியான, உண்மையற்ற பக்தியை ஒழித்தவர்:**

மாணவர்கள் ஒவ்வொரு நாளும் குழுவாக சிலுவைப்பாதைச் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். செப்பரீனோவின் தலைமையில் சிலுவைப்பாதை செய்த குழுவில் மட்டும் எப்போதுமே எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. இதற்கு செப்பரீனோவிடமிருந்த பக்திதான் முதல் காரணம் என்று அனைவருமே உணர்ந்திருந்தனர். போலி பக்தியோ, உண்மையற்ற வாழ்வோ ஒருபோதும் செப்பரீனோவினிடத்தில் காணப்படவில்லை. இதுவே பல மாணவர்களை இவரிடம் ஈர்த்தது.

**கருணை மற்றும் அமைதியின் தூதுவன்:**

செப்பரீனோ கருணை மற்றும் அமைதியின் தூதுவனாக தன் வாழ்வில் நடந்தார். தன் முதல் திருவிருந்து நாளுக்குமுன் தன்னோடு மனத்தாங்கல் கொண்டிருந்த ஒரு மாணவனிடம் சென்று மன்னிப்புக் கேட்ட நிகழ்வை அவருடைய நண்பர்கள் என்றும் நினைவில் வைத்திருந்தனர். அதுமட்டுமல்ல, பல நேரங்களில் மாணவர்களிடையே சண்டை வந்தபோது செப்பரீனோவின் நடுநிலைத்தன்மையை மதித்துத் தீர்வுகள் காணப்பட்டன என்பதை அவரின் நண்பர்கள் கூறக் காண்கின்றோம்.

**சுயக்கட்டுப்பாடு:**

செப்பரீனோவின் ஆசிரியர்களாகவும் பொறுப்பாளர்களாகவும் இருந்தவர்கள் அவரிடம் அசாத்தியமான கட்டுப்பாடு இருந்ததாகக் கூறுகின்றனர். அவர் தனக்கென ஒரு வாழ்வு முறையை வகுத்துக்கொண்டு அதன்படி வாழ்ந்தது மிகத்தெளிவாகத் தெரிந்தது. மறைக்கல்வி தொடர்பான எந்தப் போட்டியாக இருந்தாலும் செப்பரீனோவே முதலாவதாக நிற்பார். மரியன்னையின் படம் ஒன்றும் தோமினிக் சாவியோவின்

படமொன்றும் எப்போதுமே அவர் மேசையின்மீது இருக்கும். வாரந்தோறும் ஒருமுறை ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதும் தினமும் நற்கருணை உட்கொள்வதும் அவரின் பழக்கமாயிருந்தன. பீடச்சிறுவனாயிருந்து திருப்பலிக்கு உதவி செய்வது அவருக்கு எப்போதும் பெருமகிழ்ச்சியை ஊட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

**சலேசியப் பூஞ்சோலையில் செப்பரீனோ:**

சலேசிய ஆயராக இருந்த பேரருட்திரு. கலியேரோ அவர்களையும் தன் பகுதியில் பணியாற்றிய சலேசிய குரு அருட்பணி மிலனேசியோ அவர்களையும் பார்த்துத் தானும் ஒரு சலேசிய குருவாக வேண்டும் என்று எண்ணினார் செப்பரீனோ. அதைத் தன் ஆசிரியர்களிடம் கூறி வந்தார். தன் இனத்தைச் சார்ந்த பழங்குடி மக்களுக்கு இறைப்பணி செய்து நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்றத் தணியாத் தாகம் அவரிடமிருந்தது. நான்கு வருடங்கள் அந்த சலேசியப் பள்ளியில் படிப்பை முடித்த தருணத்தில் செப்பரீனோவின் உடல்நலம் குன்றி நோய்வாய்ப்பட நேர்ந்தது. இதையறிந்த ஆயர் கலியேரோ அவரை அவருடைய சொந்தப் பகுதியிலேயே படிக்க அனுமதித்தார். வியத்மா என்ற இடத்தில் தன் குருமடப் பயிற்சிகளை செப்பரீனோ தொடர்ந்தார்.

1903ம் ஆண்டு வியத்மாவில் இருந்தபோது இவரின் உயிரைக் குடித்த காசநோயின் முதல் அறிகுறிகள் தோன்றின. தன்னுடைய ஆன்மீகத் தந்தையாக செப்பரீனோ கருதிய ஆயர் கலியேரோ, இவரை 1904ல் இத்தாலிக்கு அனுப்பி வைத்தார். திருத்தந்தை பத்தாம் பத்திநாதரை செப்பரீனோ சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது. பலரும் இம்மாணவரின் வாழ்க்கையைக் கண்டு "புனித அலோசியஸ் (ஞானப்பிரகாசர்) மீண்டும் நம்மிடையே இருக்கின்றார்" என்றும் "மற்றுமொரு தோமினிக் சாவியோ" என்றும் பேச ஆரம்பித்தனர். இந்த உணர்வுகளும் பக்தியும் அதிக நாட்கள் நீடிக்கவில்லை. காசநோய் அவரின் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாய் குடித்துக்கொண்டே வந்தது. 1905, மே, 11ல் அன்பு உள்ளங்கள் சூழ்ந்து நிற்க தன் ஆன்மாவை இறைப்பதம் கையளித்தார்.

**சலேசிய அன்புமுறைக் கல்விக்கு மற்றுமோர் முன்மாதிரி:**

சலேசிய பள்ளியில் நுழைந்த நாள் முதலே தோமினிக் சாவியோவின் வாழ்வை அறிந்து தெளிந்து அவரையே தன் வாழ்வின் முன்மாதிரியாகக் கொண்டு வாழ்ந்தவர் செப்பரீனோ. தோமினிக் சாவியோ 15 வயதுகூட நிரம்பாத சிறுவன் அவன் எப்படி இளைஞர்களுக்கு முன்மாதிரியாக இருக்கக் கூடும் என்று தவறான காரணம் கற்பிக்கும் சிலருக்கு செப்பரீனோ ஒரு சவால். தோமினிக் சாவியோவைத் தன் முன்மாதிரியாகக் கொண்டு வாழ்ந்தது மட்டுமல்ல, தானே ஒரு மாபெரும் முன்மாதிரியாய் வாழ்ந்து, 19 வயதிலும் இறைவனுக்கேற்ற வாழ்க்கையை வாழ முடியும் என்று காட்டியவர் நமது செப்பரீனோ என்றால், அது மிகையாகாது. திருஅவை இவரை 2007 நவம்பர் 11ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தியது. எனவே சலேசியர்களின் வழிநடத்துதலில் இளையோர்கள் மட்டுமல்ல, அனைத்து





கத்தோலிக்க இளையோர்களின் வாழ்க்கைக்கும் ஒரு அரும்பெரும் முன்மாதிரியாய் செப்பரீனோ நமுங்குராவின் வாழ்வு அமைந்திருக்கிறது, என நாம் மகிழ்ந்து கொண்டாடுவோம். அவரைப்போல நாமும் புனிதப் பாதையில் நடந்திட ஒவ்வொரு நாளும் அவரவர் நிலையில் இறைவனிடம் நம்மையே ஒப்புக் கொடுத்து மன்றாடுவோம்.

## புனித மோனிக்கா தந்த புனித அகுஸ்தினார்

திரு. விக்டர்

நமது திருஅவையில் ஒரு தாயும் மகனும் ஒருசேர புனிதர்களாய் இருப்பது அரிதான ஒன்றாகும். அந்த இருவரான புனித மோனிக்கா பற்றியும் அவரது மகனும் திருஅவையின் மறைவல்லுநர்களில் ஒருவருமான புனித அகுஸ்தினார் பற்றியும் விவரிக்கிறது இக்கட்டுரை. "உங்களுள் ஒருவர் உண்மையை விட்டு நெறிதவறி அலையும்போது வேறொருவர் அவரை மனந்திரும்பச் செய்தால், தவறான நெறியிலிருந்து மனந்திருப்புகிறவர், அவரை அழிவிலிருந்து மீட்பார் என்பதையும் திரளான பாவங்களைப் போக்குவார் என்பதையும் தெரிந்துக்கொள்வோம்" (யாக்கோபு 5: 20) என்கிற திருவிவிலிய வசனத்திற்கேற்ப வாழ்ந்தவர் புனித மோனிக்கா அவர்கள். தனது மகன் அகுஸ்தினாரின் மனந்திரும்புதலுக்காகத் தொடர்ந்து 17 ஆண்டுகள் இடைவிடாது செபித்தும், பல்வேறு பக்தி முயற்சிகளைச் செய்தும் அவரது மனமாற்றத்திற்காக உழைத்தவர் இவர்.

இவர் கி.பி. 322ல் ஆப்ரிக்கா கண்டத்தில் உள்ள இன்றைய அல்ஜீரியா நாட்டிலுள்ள "தகாஸ்தே" என்ற ஊரில் கிறிஸ்தவ பக்தியுள்ள தம்பதியருக்கு மகளாய்ப் பிறந்தவர். இவரது இளமைப்பருவம் குறித்து நமக்குக் குறிப்புகள் கிடைக்கவில்லை. இவர் கடவுள் பக்தியில்லாத ஒருவருக்கு மணமுடித்து கொடுக்கப்பட்டவர். இத்தம்பதியருக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தனர். இவர்களில் முதலாவதாய் பிறந்தவர்தான் புனித அகுஸ்தினார். இவருக்கு ஒரு தம்பியும் ஒரு தங்கையும் உண்டு. தந்தை இறைபக்தி இல்லாதவராதலால் குழந்தைகள் மூவருக்கும் திருமுழுக்கு கொடுக்க அனுமதி அளிக்கவில்லை. ஆனால் தாயார் மோனிக்கா அவர்கள் தனது பிள்ளைகளுக்கு கிறிஸ்தவ மறையுண்மைகளை அவ்வப்போது போதித்து வளர்த்து வந்தார். வளர்ந்து வாலிபனான அகுஸ்தினார் மேற்படிப்புக்காக "கேத்தேஜ்" நகருக்குச் சென்றார். அங்கு மனம்போன போக்கில் வாழ ஆரம்பித்தார். "மாணிக்கேயிசம்" என்கிற தவறான கொள்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு ஒன்பது ஆண்டுகள் தன்னை மறந்து வாழ்ந்தார். வாலிப வயதில் எல்லா தவறுகளுக்கும் ஆளானார். இக்காலக்கட்டங்களில் இவரது மனமாற்றத்திற்காக அயராது இவர் அன்னை தொடர்ந்து செபித்து வந்தார்.

கடவுள் நமது செபங்களுக்கு பல விதங்களில் செவிசாய்க்கிறார். முதலாவது உடனடியாகப் பதில் தருகிறார். இரண்டாவதாக காலம் தாழ்த்தி

பதில் தருகிறார். மூன்றாவதாக நாம் கேட்பதற்குப் பதில் வேறொன்றைத் தருகின்றார். புனித மோனிக்கா அவர்கள் பொறுமையாக ஆண்டவரின் சித்தத்தின்படி தனது மகனின் மனமாற்றத்திற்காகச் சோர்ந்து போகாமல் செபித்து வந்தார். அதுமட்டுமல்லாது தனது கணவரும், அவரது மரணத்திற்கு முன்பாக மனந்திருந்தி திருமுழுக்குப் பெறவேண்டுமெனவும் செபித்து வந்தார். இவரது முயற்சியின் பலனாகவும் இவரது கண்ணீரின் செபத்தையும் ஆண்டவர் கண்டார். எசேக்கியா மன்னனின் கண்ணீருக்குப் பதிலளித்த ஆண்டவர் (எசா. 38:5). ஆகாரின் கண்ணீருக்குப் பதிலளித்த ஆண்டவர் (தொ.நூ. 21:17) அன்னாளின் கண்ணீருக்குப் பதிலளித்த ஆண்டவர் (1சாமு 1: 11) மோனிக்காவின் கண்ணீருக்குப் பதிலளித்தார். அவரது கணவர் மனம்மாறி திருமுழுக்குப்பெற்று கிறிஸ்தவரானார். மகன் அகுஸ்தினாரும் தனது 32வது வயதில் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவரானார். புனித மோனிக்கா அவர்களின் செபவாழ்வுக்கும், கடவுள்மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கும் உறுதுணையாக இருந்து உற்சாகப்படுத்தியவர் மிலான் ஆயர் புனித அம்புரோசு ஆவார்.

கணவரின் மனமாற்றத்தினாலும் மகனின் மனமாற்றத்தினாலும் நிம்மதியடைந்த புனித மோனிக்கா அவர்கள் தனது 56வது வயதில் கி.பி. 387 ஆகஸ்ட் 27ம் நாள் ஆண்டவருக்குள் மரித்தார். அகுஸ்தினாரின் கனவில் தோன்றிய ஒரு சிறுவன் அருகிலிருந்த திருவிவிலியத்தைக் காட்டி "எடுத்து வாசி" என்று மூன்று முறை சொன்னான். இந்த கனவுதான் அவர் குருவாக வேண்டும் என்ற விருப்பத்தை உண்டாக்கியது. அக்கனவில் அவர் எடுத்து வாசித்த திருவிவிலியப் பகுதி உரோ. 13:12ல் உள்ள "இரவு முடியப்போகிறது, பகல் நெருங்கிவிட்டது. ஆகவே, இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்துவிட்டு ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலன்களை அணிந்துக் கொள்வோமாக" இந்த வார்த்தைகளின்படி வாழ ஆரம்பித்தார். தனது 36வது வயதில் குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்டார். சாதாரணமான குருவாக இல்லாமல் திருச்சபையின் மறைவல்லுநராக உயர்ந்தார். கி.பி. 396ல் ஆண்டு "ஹிப்போ" நகருக்கு ஆயராக உயர்த்தப்பட்டார். எளியவர்களைக் குப்பை மேட்டிலிருந்து கைதூக்கி விடுகிற ஆண்டவர் (திபா. 113:7) புனித அகுஸ்தினாரை மிகச்சிறந்த ஆயராக உயர்த்தினார்.

புனித அகுஸ்தினார் திருவிவிலியத்திற்கு அநேக விளக்கவுரைகள் வழங்கியுள்ளார். 500க்கும் மேற்பட்ட விளக்கவுரைகளையும் 200க்கும் மேற்பட்ட கடிதங்கள் வாயிலாக திருஅவை நிலைத்து நிற்க உதவினார். "வாழ்க்கையை இறைவார்த்தையின்படி வாழவேண்டும்" என்று வலியுறுத்தினார். "உன் வாழ்வுக்கு நீதான் பொறுப்பு என்பது அவரது பாடம்" "அருட்சாதன வாழ்வில் கிறிஸ்துவே முதல் அருட்சாதனம்" என்று விளக்கினார். திருஇசைக்கு அதிமுக்கியத்துவம் வழங்கினார். "ஒருமுறை





பாடுவது இருமுறை செபிப்பதற்கு சமம்" என்பது இவரது அனுபவபாடம். இன்றைக்கு குருக்கள் சொல்லும் "திருப்புகழ்மாலையை" உருவாக்கி வழங்கியவர் புனித அகுஸ்தினார். இந்த செபமானது காலை, மதியம், மாலை, இரவு என நான்கு வேளைகளிலும் சொல்லக்கூடிய செபமாகும். இதை எல்லா மக்களும் சொல்ல வேண்டும் என்பது அவரது விருப்பமாகும்.

அவர் எழுதிய 'The City of God" என்கிற நூலும், 'The confession'என்கிற நூலும் மிகப் பிரபலமானவை. 'the confession' பாவ ஒப்புதல் என்கிற தனது புத்தகத்தில், தான் எவ்வாறு பாவ வாழ்விலிருந்து மீண்டார் என்பதை விவரித்துள்ளார். இவரது இந்த புத்தகங்கள் அநேகருடைய வாழ்வை மாற்றியமைத்துள்ளன. திருச்சபை இவரை "மறைவல்லுநர்" என்று போற்றி மகிழ்கிறது. கடவுளின் ஒவ்வொரு மனித படைப்பிற்குள்ளும் ஆண்டவரின் ஆற்றல் அடங்கியுள்ளது. கடவுளின் ஆவிக்குரிய அலை வரிசையோடு நமது ஆவிக்குரிய அலைவரிசை இணையும்பொழுது புதிய புதிய புனித அகுஸ்தினார்கள் பிறக்கிறார்கள். இவ்வளவு சிறப்புமிக்க புனித அகுஸ்தினார் கி.பி. 430, ஆகஸ்ட் 28ம் நாள் இறைவனடி இணைந்தார். அந்நாளை அவரது திருவிழா நாளாக திருஅவை சிறப்பிக்கிறது. புனித மோனிக்கா, புனித அகுஸ்தினார் இருவரும் நமது ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்டிகளாக, நம்பிக்கையின் அடையாளங்களாக விளங்குகின்றனர். நமது விசுவாச வாழ்வுக்கு இவர்களது வாழ்வு வழிகாட்டுவதாக, வளமூட்டுவதாக ஆமென்.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.

### பனாமா உலக இளையோர் நிகழ்வில் திருத்தந்தை:

பனாமா நாட்டில் 2019ம் ஆண்டு, சனவரி 22 தேதி முதல் 27ம் தேதி வரை நடைபெறவிருக்கும் உலக இளையோர் நாள் நிகழ்வுக்கு, அந்நாட்டு அரசும், ஆயர்களும் விடுத்த அழைப்பை ஏற்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்நாடு செல்லவுள்ளார் என்று, திருப்பீடத் தகவல் தொடர்பாளர் Greg Burke அவர்கள் அறிவித்துள்ளார். பனாமா நாட்டின் பனாமா நகரில், உலக இளையோர் நாள் தொடங்கிய அடுத்த நாள், அதாவது சனவரி 23ம் தேதி பானமா செல்லும் திருத்தந்தை, 27ம் தேதிவரை அந்நாட்டில் இருப்பார். இந்த உலக இளையோர் நாள், "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக்கா 1,38) என்ற தலைப்பில் சிறப்பிக்கப்பட இருக்கின்றது.

### திருத்தியமைக்கப்பட்ட புலம் பெயர்ந்தவர் ஒப்பந்தம்-வரவேற்பு:

புலம்பெயர்ந்தவரின் பாதுகாப்பு மற்றும் அவர்களை விதி முறைகளின்படி ஏற்பது குறித்து, மிக அண்மையில் திருத்தியமைக்கப்பட்ட ஐ.நா.வின் ஒப்பந்தம் மகிழ்வை அளிப்பதாகத் தெரிவித்த பேராயர் அவுசா அவர்கள், எந்தவிதப் பாகுபாடுமின்றி, அனைத்து நாடுகளும்,

அனைவரின் மனித உரிமைகளை மதித்து, பாதுகாத்து நிறைவேற்றுமாறு வலியுறுத்தினார். அனைத்து மக்களுக்கும், தங்களின் சொந்த நாடுகளில், அமைதி, வளமை மற்றும் பாதுகாப்பில் வாழ்வதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றனர் எனவும் குறிப்பிட்ட பேராயர் அவுசா அவர்கள், அனைவரும் புலம்பெயர, குறிப்பாக, தாங்கள் வாழ்கின்ற இடங்களில் பாதுகாப்பு உறுதிசெய்யப்படாத நிலையில், புலம் பெயர உரிமையுள்ளது எனவும் கூறினார்.

**மங்களூரு மறைமாவட்டத்தின் புதிய ஆயர் பால் சல்தான்னா:**

இந்தியாவின் மங்களூரு மறைமாவட்டத்தின் புதிய ஆயராக, அருள்பணி பால் சல்தான்னா (Paul Saldanha) அவர்களை, இச்செவ்வாய்க் கிழமையன்று நியமித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். மங்களூரு மறைமாவட்டத்தின் ஆயராகப் பணியாற்றிய அலாய்சியஸ் பால் டி சூசா அவர்களின் பணி ஓய்வை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உரோம் உர்பானியானம் பாப்பிறை பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும், 54, வயது நிரம்பிய அருள்பணி பால் சல்தான்ஹா அவர்களை ஆயராக அறிவித்தார். இவர் 1991ம் ஆண்டில் அருள்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

**பசுமை வழிச்சாலைத் திட்டத்திற்கு தமிழக ஆயர்கள் எதிர்ப்பு:**

"தமிழக அரசே, மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் பசுமை வழிச்சாலை திட்டத்தைக் கைவிடுக" என்ற தலைப்பில், தமிழக கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவரான, மதுரை பேராயர் அந்தோணி பாப்புசாமி அவர்கள் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்களின் வாழ்வை அழித்து, அதன்மேல் உருவாகும் வளர்ச்சித் திட்டங்களை ஆயர்கள் ஏற்கவில்லை எனக் கூறப்பட்டுள்ளது. வளர்ச்சி என்ற பெயரில், அரசு நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் எவையுமே மக்களுக்குப் பயன்பட்டதாகத் தெரியவில்லை என்றும், தொழில் வளர்ச்சி என்றும், வேலை வாய்ப்பு அதிகரிப்பு என்றும், மக்களுக்கு ஆசைக்காட்டி திசைத்திருப்பும் அரசின் போக்கைக் கண்டிக்கிறோம் என்றும், அவ்வறிக்கைக் கூறுகிறது. வளர்ச்சி என்ற பெயரில், இன்றைய அரசுகள் முன்னெடுக்கும் திட்டங்கள் பன்னாட்டு நிறுவனங்களுக்கும், உள்நாட்டு ஏகபோகங்களுக்கும் துணைப்போய்க்கொண்டிருக்கின்ற நிலையில், சேலம்-சென்னை பசுமை வழிச்சாலைச் சாலையும், மக்களுக்கான சாலையாக இருக்கப் போவதில்லை என்பதால், பசுமை வழிச்சாலை என்ற பெயரில், மக்களின் வாழ்வாதாரம் எனும் அடிப்படை உரிமையைப் பறிக்கும் இவ்வன்முறைத் திட்டத்தைக் கைவிட தமிழக அரசை வேண்டுகிறோம் என்றும் தமிழக ஆயர்களின் அறிக்கை கூறுகின்றது.





## சுடர் வாசகர் போட்டி - 49 சரியான விடைகள்

1. அலெக்சாண்ட்ரோ செரனெல்லா
2. புனித பவுல்
3. புனித பெனடிக்ட்
4. தந்தை செபதேயு, தாய் சலோமி
5. புனித சுவக்கீன், புனித அன்னாள்
6. புனித லயோலா இஞ்ஞாசியார்.
7. திருத்தந்தை 6ஆம் பவுல், ஆஸ்கர் ரொமேரோ, பிரான்செஸ்கோ ஸ்பினெல்லி, வின்சென்சோ ரொமானோ, மரிய கத்தரீனா காஸ்பரோ, இயேசுவின் தெரசின் நசரியா இஞ்ஞாசியார்
8. புனித தோமா
9. அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ்
10. புனித பெனடிக்ட்
11. உத்திரியம்
12. புனித யாக்கோபு
13. புனித அல்போன்சா
14. புனித தோமா
15. திருத்தந்தை பிரான்சிஸ்

**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்**

1. D. Jeeno, Sivakasi
2. George Stephen, Villupuram
3. C. Pauline Susainathan, Madurantakam

## சுடர் வாசகர் போட்டி - 50

1. "புனிதர் ஆவதற்காக எல்லா தகுதியும் இவரிடம் காணப்பட்டன" யார் யாரைப் பார்த்துக் கூறியது?
2. இயேசுவின் தோற்ற மாற்றத்தின் போது வானத்திலிருந்து கேட்ட வார்த்தைகள் என்ன?
3. "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே, இந்த உணவை எவராவது உண்டால் என்றுமே வாழ்வார்." இந்த வார்த்தை எங்கு உள்ளது?
4. நம் நாடு சுதந்திரம் பெற்று எத்தனை ஆண்டுகள் ஆகிறது?
5. "இவர் கபடற்றவர்" யார் யாரைப்பார்த்து கூறிய வார்த்தை இது?
6. தூய அகுஸ்தினாரின் பெற்றோர் யார்?
7. பிரான்சு நாட்டை விண்ணேற்பு அன்னைக்கு ஒப்புக்கொடுத்த புனிதர் யார்?
8. இரட்சகர் சபையை உருவாக்கியவர் யார்?
9. அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கியின் பெற்றோர் பெயர் என்ன?
10. குருக்களின் மற்றும் பங்குத் தந்தையர்களின் பாதுகாவலர் யார்?
11. அன்னை மரியாளின் விண்ணேற்பாடு கொண்டாடப்படும் மற்றொரு விழா என்ன?
12. அரசியான தூய கன்னிமரியா விழாவை மையப்படுத்திச் செபிக்கப்படும் தேவ இரகசியம் எது?
13. அருளாளர் மரிய ட்ரொங்காட்டி எந்த ஆண்டு எப்படி இறந்தார்?
14. "எடுத்து வாசி" என்ற வார்த்தையால் மனமாற்றம் பெற்ற புனிதர் யார்?
15. அடுத்த ஆண்டு உலக இளையோர் நாளின் தலைப்பு என்ன?

**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................





## அடுத்த சுடரில்

**பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி**

02.10.2018 குழந்தை இயேசுவின் புனித தெரேசா
02.10.2018 தூய காவல் தூதர்கள்
04.10.2018 புனித பிரான்சிஸ் அசிசியார்
05.10.2018 புனித ஆல்பர்ட் மர்வெல்லி (புத்தகம்)
07.10.2018 ஆண்டின் பொதுக்காலம் 27-ஆம் ஞாயிறு
11.10.2018 திருத்தந்தை 23ம் ஜான்
13.10.2018 அருளாளர் அலெக்சாண்டிரீனா மரிய தா கோஸ்தா (புக்)
14.10.2018 ஆண்டின் பொதுக்காலம் 28-ஆம் ஞாயிறு
15.10.2018 புனித அவிலா தெரேசா
16.10.2018 புனித மார்கிரேட் மரி அலக்காக்
17.10.2018 அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார்
18.10.2018 புனித லூக்கா நற்செய்தியாளர் விழா
19.10.2018 புனித சிலுவையின் பவுல்
21.10.2018 ஆண்டின் பொதுக்காலம் 29-ஆம் ஞாயிறு
22.10.2018 புனித திருத்தந்தை 2ம் ஜான்பால்
24.10.2018 புனித அந்தோணி மரிய கிளாரெட்/புனித லூஜி குவனெல்லா
28.10.2018 ஆண்டின் பொதுக்காலம் 30-ஆம் ஞாயிறு
29.10.2018 அருளாளர் தொன் மைக்கேல் ரூவா (புத்தகம்)

**பகுதி 2: விசுவாசத்தில் வாழ...**

திருச்சபை செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை செப்டம்பர் 20ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## செப்டம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | ச | | 1கொரி. 1: 26-31 | மத். 25:14-30 |
| 2 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 22ம் ஞாயிறு | I. இ.ச. 4: 1-2,6-8<br>II. யாக். 1: 17-18,21-22,27 | மாற்கு 7:1-8,14-15, 21-23 |
| 3 | தி | புனித பெரிய கிரகோரியார் | 1கொரி. 2:1-5 | லூக். 4:16-30 |
| 4 | செ | | 1கொரி. 2: 10-16 | லூக். 4:31-37 |
| 5 | பு | கொல்கத்தாவின் புனித அன்னை தெரேசா | 1கொரி. 3: 1-9 | லூக். 3:38-44 |
| 6 | வி | | 1கொரி. 3: 18-23 | லூக். 5:1-11 |
| 7 | வெ | | 1கொரி. 4: 1-5 | லூக். 5:33-39 |
| 8 | ச | தூய கன்னிமரியின் பிறப்பு விழா (ஆரோக்கிய அன்னை) விழா | மீக்.5:2-5(அ)உரோ.8:28-30 | மத்.1:1-16,18-23 |
| 9 | ஞா | ஆண்டின் பொதக்காலம் 23ம் ஞாயிறு | I. எசா. 35: 4-7<br>II. யாக். 2: 1-5 | மத்.7: 31-37 |
| 10 | தி | | 1கொரி. 5: 1-8 | லூக். 6:6-11 |
| 11 | செ | | 1கொரி. 6: 1-11 | லூக். 6:12-19 |
| 12 | பு | புனித மரியாவின் திருப்பெயர் | 1கொரி. 7: 25-31 | லூக். 6:20-26 |
| 13 | வி | புனித ஜான் கிறிசோஸ்தம் | 1கொரி. 8: 1-7,11-13 | லூக். 6:27-38 |
| 14 | வெ | திருச்சிலுவையின் மகிமை விழா | I. எண். 21:4-9<br>II. பிலி. 2:6-11 | யோவா. 3: 13-17 |
| 15 | ச | புனித மரியன்னையின் துயரங்கள் (வியாகுல மாதா) | 1கொரி. 10: 14-18 | யோவா. 19:25-27 |
| 16 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 24ம் ஞாயிறு | I. எசா. 50: 5-9<br>II. யாக். 2: 14-18 | மாற்கு 8: 27-35 |
| 17 | தி | புனித இராபர்ட் பெல்லார்மின் | 1கொரி. 11: 17-26 | லூக். 7:1-10 |
| 18 | செ | | 1கொரி. 12:12-14,27-31 | லூக். 7:11-17 |
| 19 | பு | புனித ஜனுவாரியுஸ் | 1கொரி. 12: 31-13:13 | லூக். 7:31-35 |
| 20 | வி | புனித ஆன்ட்ரூ கிம் தெகோன் | 1கொரி. 15: 1-11 | லூக். 7:36-50 |
| 21 | வெ | புனித மத்தேயு திருத்தூதர் | எபே. 4: 1-7,11-13 | மத். 9:9-13 |
| 22 | ச | | 1கொரி. 15: 35-37,42-49 | லூக். 8:4-15 |
| 23 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 25ம் ஞாயிறு | I. சா.ஞா. 2:17-20<br>II. யாக். 3:16-4:3 | மாற்கு 9:30-37 |
| 24 | தி | | நீமொ.3: 27-35 | லூக். 8:16-18 |
| 25 | செ | | நீமொ. 21: 1-6,10-13 | லூக். 8:19-21 |
| 26 | பு | புனித கோஸ்மாஸ், புனித தமியான் | நீமொ. 30:5-9 | லூக். 9:1-6 |
| 27 | வி | புனித வின்சென்று தெ பால் | ச.உ. 1: 2-11 | யோவா. 9:7-9 |
| 28 | வெ | புனித வென்செஸ்லாஸ், புனித லாரன்ஸ் ரூயிஸ் | ச.உ. 3:1-11 | லூக். 9:18-22 |
| 29 | ச | தூய மிக்கேல், கபிரியேல், இரபேல் அதிதூதர்கள் | தானி. 7: 9-10,13-14<br>(அ) திவெ. 12: 7-12 | யோவா. 1: 47-51 |
| 30 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 26ம் ஞாயிறு | I. எண். 11:25-29<br>II. யாக்.5:1-6 | மாற்கு 9:38-48 |
| | | | | |